வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 329 | பக்கங்கள் : 20










07 தேவார திருப்பதிகங்களை காப்பாற்றிய இராஜராஜ சோழன்!



08 மன்னிப்புடன் மறந்துவிடக் கூடியதா தேரரின் இனவெறிக் கூச்சல் ?



09 பட்ஜெட் தோற்றால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்



11 ஆழ்கடலில் ஓர் அதிசய உயிரினம்!


# தமிழருக்கு நிலையான தீர்வை வழங்கியே தீருவார் ஜனாதிபதி!

## சிரேஷ்ட ஆலோசகர் சாகல உறுதி



கொழும்பு, நவம்பர் 05

**இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நிலையான தீர்வை வழங்கியே தீருவார் எனவும் இதை இலங்கை வந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடமும் ஜனாதிபதி கூறியுள்ளார் எனவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களுக்குத் தீர்வு வேண்டும் என்று சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் விடுக்கும் கோரிக்கையை ஏற்கின்றோம். அதேபோல் அவர்களும் ஜனாதிபதியின் தேசிய ரீதியான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போதுதான் பாராளுமன்றத்தில் ஆளும், எதிரணி என இரு தரப்பினரும் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்து அதை நிறைவேற்றிக் கொள்ள முடியும் - என்றார். (அ)

## டிசெ. 22 முதல் பெப். 2 வரை பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, நவ. 05

2023 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

முதலாம் தவணைக்கான பாடசாலை நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக

15

## 20 வைத்தியசாலைகளுக்கு பூட்டு!

கொழும்பு, நவ. 05

நாட்டில் உள்ள சுமார் 20 கிராமிய வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சம்மில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரு மாதத்தில் மேலும் 50 கிராமப்புற வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

“அண்மைக்காலமாக பல மருத்துவர்கள் உயர் வரி விதிப்பால் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

15

## தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி இன்னும் நிறைவேற்றவில்லை

### விக்னேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ. 05

தமிழ் சமூகம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றவில்லை என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதாக ஜனாதிபதி உறுதியளித்த போதும் அவை நிறைவேற்றப்படாததால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ரணில்

15

## போரை முடித்துவிட்டோம் எனக் கூவியே நாட்டை சூறையாடிய ராஜபக்ஷ குடும்பம்!

### சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, நவ. 05

”போரை முடிவுக்கு கொண்டுவந்தோம், போரை முடிவுக்கு கொண்டுவந்தோம் எனக் கூவி கூவியே தேசிய வளங்களை ஒரு குடும்பம் (ராஜபக்ச குடும்பம்) அபகரித்துள்ளது. யுத்தம் முடிந்தால் நாடு இன்னும் சுதந்திரம் அடையவில்லை.” - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன், நாட்டை அழித்த ராஜபக்சக்களை தான் பாதுகாக்கப்போவதில்லை எனவும், அவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டம் அமுல்படுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட பணம் நாட்டுக்கு

15

## 2024இல் தேர்தல்களை நடத்த 30 பில்லியன் ரூபா செலவாகும்!

கொழும்பு, நவ. 05

2024ஆம் ஆண்டில் தேர்தல்களை நடத்த 30 பில்லியன் ரூபா செலவாகும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அரசியலமைப்பு பேரவை இது வரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கான அனைத்து உறுப்பினர்களையும் நியமிக்கவில்லை எனவும் சமன்ஸ்ரீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“ஐந்து உறுப்பினர்களில் நான்கு பேர் மட்டுமே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று பேரின் அனுமதி இருந்தால் பணிகளை முன்னெடுக்க முடியும். அதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் கடமைகளையும் செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதுள்ள தேர்தல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை ஆராய்வது மற்றும் மாற்றங்களை பரிந்துரைப்பது போன்ற விவா தங்களுக்கு தேர்தல்கள் மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு,

15

## டென்மார்க்கில் தீ விபத்தில் சிக்கிய யாழ். வாசி மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 05

டென்மார்க்கில் இடம் பெற்ற தீ விபத்து சம்பவத்தில் படுகாயம் அடைந்த யாழ்ப்பாணத்தைச சேர்ந்த இளங்குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு - செம்பியன்பற்று தெற்கைச் சேர்ந்த ஆறுமுகசாமி காண்டீபன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

குறித்த குடும்பஸ்தர் டென்மார்க் நாட்டில் குடும்பத்துடன் வசித்து வந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் எரிவாயு தீப்பற்றி படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் கடநத வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## லிட்ரோ எரிவாயுவின் விலைகள் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 05

லிட்றோ சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

லிட்றோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை 95 ரூபாயால் அதிகரித்துள்ள நிலையில், புதிய விலை 3,565 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது

5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

அறகலய போராட்டம் நடந்தபோது நம்மவர்கள் அதனைக் கண்டுகொள்ளவே இல்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்த போது, மண்ணெண்ணெயக்கும் டீசலுக்கும், பால்மாவுக்கும் கியூவில் நின்றபோது மக்கள் வீதிக்கு வந்தனர். ஆனால் இதை விட நெருக்கடியை பல ஆண்டுகளுக்கு முன்னரே எதிர்கொண்டு பழக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அவை பழகிப்போன விடயங்களாக இருந்ததாலோ என்னவோ அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

அதுகும் அறகலய மீது நம்மவர்கள் கவனம் செலுத்தாதற்கு காரணமாக இருக்கலாம்.

ஆனால் அறகலய இன, மத உணர்வுகளைக் கடந்து செயற்படத் தொடங்குவதாக காட்டிக்கொண்டபோது எம்மவர்களின் பார்வையை அது பெற ஆரம்பித்தது. ஆனாலும் ரணிலின் சாதுரியத்தால் அறகலய காணமல் போய்விட்டது.

அறகலய போராட்டக் களத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டபோது நம்மவர்கள் அதனை கொண்டாடியதையும் காணமுடிந்தது.

தெற்கில் இனவாதமே இனி தோற்றம்பெறமுடியாது என்ற பாணியில் தெற்கில் சிலரும் ஏன் நம்மவர்கள் சிலரும் கூட நம்பிக்கை வெளியிட்டதையும் அப்போது காணமுடிந்தது.

ஆனால் இன்று அறகலய மூலம் நாட்டில் இனவாதத்தை இல்லாமல் ஒழித்துவிட்டதாக கூறியவர்களைக் கூட காண முடியவில்லை.

இவ்வாறு அந்தப் போராட்டத்தில் இனவாதத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தெற்கில் இளைஞர்கள் ஒன்றிணைந்து விட்டார்கள் என்று நமக்கு பாடம் எடுத்தவர்களில் முக்கியமானவர்களில், அந்த இளம் பெண் சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கமும் ஒருவர். அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. அவர் அப்படித்தான் நம்பியிருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்றும் அவர்கள் விரும்பினால் பிரிந்து போகின்ற உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உள்ளவர்கள் என்றும் தெற்கில் உரத்துக் குரல் கொடுத்தவர்களில் முக்கியமானவர்கள் இடதுசாரிகள். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் வடக்கில் செல்வாக்குப்பெற்றிருந்ததற்கு அதுவும் ஒரு காரணம்.

ஆனால் பின்னாட்களில் தமிழர்கள் இந்த இடதுசாரிகளாலேயே பல 'இன்னல்களை' எதிர்கொள்ள நேர்ந்ததும் நாம் கண்டவைதான். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட குடியரசு அரசியலமைப்பை இடதுசாரித் தலைவரான கொல்வின் ஆர் டி சில்வாவே தயாரித்தார் என்பதும், அவர் அந்த அரசியலமைப்பில் தமிழ் மக்களைக் கண்டுகொள்ளவில்லை என்பதும் எமக்கு மறந்துபோனவை அல்ல.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருபவை.

அறகலய போராட்டத்தின்போது, அங்கே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடந்த போது அதனைக் கொண்டாடிய நாங்கள், அதற்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவரை இப்போது அவமானப்படுத்தி அனுப்பியிருக்கின்றோம். சட்டத்தரணி, தொழிற்சங்க தலைவர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் சுவஸ்திகா அருலிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த கல்விசார்ந்த நிகழ்வில் பங்கு கொண்டு உரையாற்றுவது மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த முப்பத்தியோராம் திகதி அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் 'நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்' என்ற தலைப்பில் உரையாற்றவிருந்தார். ஆனால் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்பு காரணமாக அவரது உரை இடம்பெறுவது நிறுத்தப்பட்டது.

மாணவர்கள் அவர் உரையாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பது, அவர் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பாசிச இயக்கம் என்று விமர்சித்ததனாலேயே.

விடுதலைப் புலிகள் இயக்கம் அவர் விமர்சித்ததுபோல ஒரு பாசிச இயக்கமா இல்லையா என்பதல்ல நாம் சொல்ல வருவது. அவர் கூறிய கருத்துக்கள் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவைதான் என்றாலும், நாம் அவருக்கு அவரது கருத்து தவறானது என்று அவர் உணரும் வகையில் அவருக்கு விளக்கமளித்திருக்க வேண்டுமே தவிர, அதற்கு எதிராக இவ்வாறு எதிர்வினையாற்றுவது புத்திசாலித்தனமானதல்ல.

அதனையும் விட முக்கியமானது, நமது தலைவர் சம்பந்தன் கூட ஒரு தடவை பாராளுமன்றில் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று வர்ணித்திருந்ததை மாணவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். தமிழரசு கட்சியின் பேச்சாளர் சுமந்திரன், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பகிரங்கமாக கூறிய பின்னரும் அவருக்கு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாக்களித்து தமது பிரதிநிதியாக தெரிவுசெய்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றியது ஓர் இனசுத்திகரிப்பு என்று சொன்னவர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு பல வருடங்களாகிவிட்டன.

இத்தனைக்கும் பிறகு, புலிகளை விமர்சித்தார் என்பதற்காக அவரது கருத்தை கேட்க வேண்டாம், அவரது கருத்தை அவர் சொல்வதை தடுப்பது எவ்வகையிலும் நமக்கு உதவப் போவதில்லை.

**- ஊர்க்குருவி.**

# பாதுகாப்பு மூலோபாய திட்டம் எதிர்வரும் ஆறு மாதத்திற்குள்!

கொழும்பு, நவ. 05

நாட்டின் நிலம் மற்றும் சமுத்திரத்தின் பாதுகாப்பிற்கான மூலோபாய திட்டத்தை தயாரிப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் முதலாவது அறிக்கையை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு மீளாய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

நாட்டின் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கும் பொறுப்பு வழங்கப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலுக்கு உட்படுத்தி ஜனாதிபதியினால் குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலகவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வுபெற்ற முப்படைத் தளபதிகள் மற்றும் வெளிவிவகார அமைச்சு மற்றும் நிதி மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசகர்கள் உட்பட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகும்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் சமுத்திரத்தின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகளின் அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் 2030ஆம் ஆண்டு இலக்காகக் கொண்ட மூலோபாய திட்டத்தை தயாரிக்கும் வேலைத் திட்டத்தையும் ஜனாதிபதி இந்தக் குழுவிடம் ஒப்படைத்துள்ளார்.

குறித்த குழு கூட்டத்தில் கலந்து கொண்ட சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியால் வழங்கப்பட்ட கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்து ஆறு மாதங்களுக்குள் அறிக்கையை வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.(அ)

# அதிகரித்த விலையில் சீனியை விற்கும் வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, நவ. 05

நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நாடளாவிய ரீதியில் நுகர்வோர் அதிகார சபை நேற்று முதல் தமது சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு கைது செய்யப்படும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் அமுலாகும் வகையில் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பொதியிடப்படாத ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 275 ரூபாயாகவும், பொதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 295 ரூபாயாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பொதி செய்யப்படாத ஒரு கிலோகிராம் சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 330 ரூபாயாகும்.

பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் சிவப்பு சீனியின் விலை 350 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (அ)

# குடிசன மதிப்பீட்டு பணிகளில் இருந்து விலகும் கிராம உத்தியோகத்தர்கள்?

கொழும்பு, நவ. 05

சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவதற்காக உரிய கொடுப்பனவு வழங்கும் வரையில் அந்த பணிகளில் இருந்து விலகுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் கமல் கித்சிறி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஏனைய கிராம உத்தியோகத்தர்களின் சங்கங்களும் ஆதரவு வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

10 வருடங்களுக்கு ஒரு முறை முன்னெடுக்கும் சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீட்டு பணிகள் இந்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி, சனத்தொகை மதிப்பீட்டில் முதல் கட்டமாக ஜனாதிபதி செயலகம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# சு.கவுக்கு பெரமுனவே தீ வைத்தது!

## துமிந்த திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 05

பொதுஜன பெரமுன கட்சியே, சுதந்திரக் கட்சிக்கு தீ வைத்தது. அன்று ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்தவர்கள், இன்று அவருடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளனர். இதன்மூலம் மொட்டு கட்சியின் 'டபள் கேம்' அம்பலமாகின்றது - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சிக்கு மைத்திரிபால சிறிசேன தீ வைத்தார், அதனால்தான் புதிய கட்சியை உருவாக்க வேண்டி ஏற்பட்டது என மொட்டு கட்சியின் செயலாளர் வெளியிட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே துமிந்த திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" மைத்திரிபால சிறிசேன அல்லர், பொதுஜன பெரமுனவே , சுதந்திரக் கட்சிக்கு தீ வைத்தது. பிரதான இரு கட்சிகளை இணைத்து நாட்டை முன்னேற்றுவதற்காகவே ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் என்ற திட்டத்துக்கு மைத்திரி உடன்பட்டார். புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாக இருந்தது.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சிசெய்தபோது, ரணிலுடன் எப்படி ஆட்சி செய்வது என கூறி விட்டே கட்சியைவிட்டு வெளியேறி அவர்கள் மொட்டு கட்சியை உருவாக்கினார்கள். சுதந்திரக் கட்சிக்கு தீ வைத்தார்கள். கோட்டாபய , மஹிந்தவை மக்கள் விரட்டிய பின்னர், மொட்டு கட்சியை பாதுகாத்துக்கொள்ள ரணிலுடன் இணைந்தனர். அன்று வேண்டாம் என கூறிய ரணில் இன்று எப்படி வேண்டப்பட்டவரானார். இதன்மூலம் மொட்டு கட்சியினரின் இரட்டை நிலைப்பாடு தெளிவாகின்றது." - என்றார். (அ)

# சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை விரைவில் நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பேன்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, நவ. 05

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் கட்டளையை மதித்து 15 மில்லியன் ரூபாயை செலுத்தியுள்ளதாகவும் இந்நிலையில் சொத்து விவரங்களை மறைக்கும் அளவுக்கு பெருமளவான சொத்துக்கள் தன்னிடம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதை விடுத்து அரசியல் நோக்கத்துக்காக தான் இலக்கு வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பாதுகாப்பு தொடர்பான முக்கிய தகவல்களை மறைத்த தரப்பினருக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் சரியாக இடம்பெறவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (அ)



# பொலிஸாருக்கு மூக்குக்கண்ணாடி

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் கண்பார்வை குறைபாடுடைய பொலிஸாருக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது,

லயன்ஸ் கழக அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கண்ணாடி வழங்கும் நிகழ்வில் கண் பரிசோதிக்கப்பட்டு பார்வைக்கு கண்ணாடி தேவையான 400 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்கள், யாழ்ப்பாண பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# ரயில் சேவையில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் ஆராய குழு நியமனம்

கொழும்பு, நவ. 05

ரயில் சேவையில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த குழுவில் ரயில்வே திணைக்களத்தின் முன்னாள் பொது முகாமையாளர்கள் இருவர் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ரயில் சேவை ஒரு திணைக்களமாகக் காணப்படுவதால், தீர்மானங்களை மேற்கொள்வதில் அதிகக் காலம் செலவிடப்படுவதாகவும் ரயில்வே திணைக்களம் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கருத்திற்கொண்டு, அதனை அதிகார சபையாக மாற்றுவது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இதற்கமைய, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# சுகாதாரம், கல்வித்துறைகளுக்கு 9 பில்லியன் ரூபா வழங்க திட்டம்

கொழும்பு, நவ. 05

உலக வங்கியின் உதவியுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்தின் ஊடாக சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு ஒன்பது பில்லியன் ரூபா வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் இதுவரையில் உறுதிப்படுத்தப்படாத 8400 பணியாளர்கள் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் அரசாங்கத்தின் நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட மாகாண சபைகள் மற்றும்



உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர இதனைக் குறிப் பிட்டார்.

ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் 06 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# காஸா மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு கோரி போராட்டம்

வவுனியா, நவ. 05

காஸா மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்தக்கோரி வவுனியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது நேற்று காலை பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மத்திய கிழக்கில் பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேல் நடத்தி வருகின்ற தாக்குதலில் 4000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய பொருளாதார நலன்களுக்காகவும், போரை உருவாக்கி ஆயுத விற்பனையை விரிவுபடுத்தவும் வேண்டி உலகம் பூராகவும் ஆக்கிரமிப்பு போரில் ஈடுபட்டு வருவதை வன்மையாக கண்டிப்பதாக இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (அ)

# இவ்வருடம் 1,800 பேராசிரியர்கள் நாட்டில் இருந்து வெளியேறினர்!

கொழும்பு, நவ. 05

இந்த வருடத்தில் மாத்திரம் பல்கலைக்கழக பேராசிரியர்கள் 1,800 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 800 பேர் இலங்கையில் பல்கலைக்கழக சேவையிலிருந்து நிரந்தரமாக வெளியேறியுள்ளதாக அதன் பேச்சாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய 1,000 பேர் கல்வி விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் வசதிகள் இன்மை பாரிய நெருக்கடியாக மாறியுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அமைப்பில் நிலவும் பிரச்னைகளை கருத்திற்கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்றுமுன்தினம் தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். (அ)

# முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது சிரமதான பணி!

முல்லைத்தீவு, நவ. 05

இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மேற்கொள்ள தமிழர் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும் தயாராக வருகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 592 ஆவது படைப் பிரிவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக் குழுவினரால் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.



முன்னதாக மாவீரர் களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் கருத்துத் தெரிவித்தனர். (அ)

# காஸாவையும் இலங்கையையும் ஐ.நா. வெவ்வேறு கோணத்தில் பார்ப்பது தவறு

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



கொழும்பு, நவ. 05

**காசா பகுதியின் மோதல் நிலைமைகளை ஒரு கோணத்திலும், ஐ.நா. சபைக்குள் இலங்கையை வேறு கோணத்திலும் பார்ப்பதில் நியாயமில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

எனவே தூய்மையான கரங்களுடன் வந்தால் அடுத்த செப்ரெம்பர் மாதம் இடம் பெறும் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை பதிலளிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெலிமடை புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் அனைத்தும் மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனத்திற்கு இணங்கிச் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேற்குலக நாடுகள் இலங்கை மற்றும் காசா தொடர்பில் பின்பற்றும் நியதிகளின் வேறுபாடுகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, தூய்மையான கரங்களுடன் உலகளாவிய தேவைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

# சட்டவிரோத மின் இணைப்பு காரணமாக மின்சாரசபைக்கு 8 கோடி ரூபா நிதி இழப்பு

கொழும்பு, நவ. 05

கடந்த 08 மாதங்களில் சட்டவிரோத மின்சாரம் இணைப்பு காரணமாக சுமார் 08 கோடி ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

சிலர் மின்சார மானியை மாற் றுதல் மற்றும், பல்வேறு சாதனங்களை பயன்படுத்தி சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதன் ஊடாக குறித்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஒகஸ்ட் மாதங்களுக்கு இடையில் இவ்வாறான மின்சார கொள்முதலால் சபைக்கு ஏழு கோடியே தொண்ணூற்று இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழு ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களில் மின்சார மானி மாற்றங்கள் தொடர்பாக 1,041 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனால் இலங்கை மின்சார சபைக்கு ஏழு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து அறுநூற்று நாற்பது ஒன்பது ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி மின் கம்பிகளில் பல்வேறு சாதனங்கள் பொருத்தப்பட்டமை தொடர்பில் 81 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதில் இருபத்தி ஆறு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து இருநூற்று ஏழு ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

குறித்த நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர் அவர்களிடமிருந்து 36 இலட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டுள்ளது.(அ)

# அதிபர் சேவை நியமனங்களுக்கு எதிரான நீதி பேராணை தள்ளுபடி!

கொழும்பு, நவ. 05

அதிபர் சேவை தரம் மூன்றில் நிலவும் வெற்றிடங் களை நிரப்புவதற்காக புதிய நியமனங்கள் வழங்கப்படுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது அதனை தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது மனுவின் பிரதிவாதிகள் எழுப்பிய அடிப்படை எதிர்ப்பை அடுத்து குறித்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதிபர் சேவை தரம் மூன்றில் நிலவும் வெற்றிடத்துக்கு நியமனம் பெறுவதற்கு தங்களுக்கு தகைமை உள்ளதாக தெரிவித்து இரண்டு அதிபர்களால் குறித்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (அ)

# செவ்விளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் உயர்வு!

கொழும்பு, நவ. 05

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் செவ்விளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், சர்வதேச சந்தையில் செவ்விளநீருக்கு நிலவும் கேள்வி தற்போது அதிகரித்துள்ளதாக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தெங்கு அபிவிருத்திக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

செவ்விளநீர் உற்பத்தி நாட்டில் முன்னேற்றமின்றிக் காணப்படுவதாகவும், மண் பரிசோதனையை மேற்கொண்டு செவ்விளநீர் செய்கைக்குப் பொருத்தமான பிரதேசத்தை அடையாளம் கண்டு, அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளை பணித்துள்ளார்.

கடந்த வருடம் 11 மில்லியன் செவ்விளநீர் தொகை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், அதில் 110 மில்லியன் ரூபாய் இலாபமும் கிடைக்கப்பெற் றுள்ளது.

இந்தநிலையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில், 14 மில்லியன் செவ்விளநீர் தொகை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 140 மில்லியன் ரூபாய் இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# போதைப்பொருள் கடத்தல் சந்தேகநபர்கள் 9 பேர் கைது!

கொழும்பு, நவ. 05

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 9 சந்தேகநபர்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 34 ஹெரோயின் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பக்தமன தெனகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# களபூமி சுந்தரமூர்த்திநாயனார் பாடசாலைக்கு விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்கள் வழங்கல்



யாழ்ப்பாணம், நவ. 05

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டுக்கு தேவையான விஞ்ஞான ஆய்வு கூட பொருட்கள் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டது.

கனடாவில் வதியும் களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் ஆகியோரின் அனுசரணையுடன் களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு கற்றல் கற்பித்தல் செயல்பாட்டுக்கு தேவையான விஞ்ஞான ஆய்வு கூட பொருட்கள் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்டன.

கனடாவில் வதியும் களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒரு லட்சம் ரூபா நிதி பங்களிப்பில் இது வழங்கப்பட்டுள்ளது.

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டுக்கு தேவையான பொருட்களை சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பழைய மாணவர்கள் பாடசாலை அதிபரிடம் நேரில் சென்று வழங்கினர்.

(அ)

# பொலிகண்டி பிரதேசத்தில் திடீரென தாழிறங்கிய கிணறு!



வடமராட்சி, நவ. 05

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொலிகண்டி தெற்கில் அமைந்துள்ள கிணறு ஒன்று திடீரென நேற்று முன்தினம் தாழிறங்கியதால் அப்பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

பொலிகண்டி தெற்கு ஜே/395 கிராம சேவையாளர் பிரிவில் வீரபத்திரர் ஆலயத்துக்கு அருகில் நேற்று முன்தினம் வெள்ளி காலை இச்சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து அருகிலுள்ள நிலங்கள், மதிலில் வெடிப்பு ஏற்பட்டது. மிக அருகில் ஆலயமும், வீடும் காணப்படும் நிலையில் அப்பகுதி மக்களுக்கு அச்ச நிலை ஏற்பட்டது.

உடனடியாக அப்பகுதி பொதுமக்களால் பருத்தித்துறை பிரதேச சபையினருக்கு தகவல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் அங்கு சென்ற பருத்தித்துறை பிரதேச சபையின் மேலதிக செயலாளர் கம்சநாதன் உள்ளிட்ட சபையின் அலுவலர்கள் அங்குள்ள நிலைமையை பார்வையிட்டு மேலும் அப்பகுதியில் அனர்த்தம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் செயற்பட்டனர்.

பிரதேச சபையின் வாகனங்களுடன் சென்ற பத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இரவு வரை கனரக வாகனங்கள் மூலம் மண்ணை கொண்டு வந்து கொட்டியும், மழை வெள்ளம் குறித்த பகுதிக்குள் நுழையாமல் தடுக்கும் நோக்கில் உரப்பைகளில் மண்ணை இட்டு மண் தடுப்பணையை ஏற்படுத்தி மீண்டும் அனர்த்தம் ஏற்படாமல் தடுக்கும் வகையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

பின் நேற்று முன் தினம் இரவு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உயர்மட்ட உத்தரவை அடுத்து மேற்படி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அப்பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் கிணற்றை தொடர்ந்து அருகிலுள்ள வீடு, கோயில் தாழிறங்கும் பட்சத்தில் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. எனினும் இது தொடர்பில் உடனடியாக அறிவித்தும் அக்கறை செலுத்தக்கூடிய இத்துறைசார்ந்த அரச அதிகாரிகள் அப்பகுதிக்கு உடனடியாக செல்லாதது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசமானது ஆலயம், வீடுகள் உள்ள பொதுமக்கள் நடமாடும் பகுதியாக உள்ளமையால் இப்படியான அனர்த்தங்கள் நிகழும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் துரிதமாக செயற்பட்டு நிலைமையை நேரில் பார்வையிட்டு பொதுமக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதே குறித்த தாழிறங்கிய கிணற்றை என்ன காரணத்தால் தாழிறங்கியது என்பதை ஆய்வு செய்வதற்காக மூடும் பணியை இடைநிறுத்துமாறு உரிய திணைக்களங்கள் பருத்தித்துறை பிரதேச சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

ஈழநாடு
Eelanadu
05.11.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவிடம் எதிர்பார்ப்பதற்கு முன்னர்

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்று - தமிழரசு கட்சியின் மூத்த அரசியல்வாதி, இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். இந்தியாவை நோக்கி, சம்பந்தன் கோரிக்கை முன்வைப்பது - அதேபோன்று, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை முன்வைப்பது புதிய விடயமல்ல. ஆனால், இந்தியாவை நோக்கி கோரிக்கைகளை முன்வைப்பதற்கு முன்னர், தமிழ் தேசியவாத கட்சிகள் என்ன செய்யவேண்டும்? - என்பதில் இன்றுரையில் கட்சிகள் மத்தியில் தெளிவான நிலைப்பாடோ, ஒன்றுபட்ட வேலைத்திட்டமோ வெளிப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவரும் ஒரேயொரு நாடு இந்தியாதான். இந்தியாவிற்கு மட்டும்தான் அந்த உரித்தும் உண்டு. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைத்துத்தான் இந்தியாவின் நேரடித் தலையீடும் நிகழ்ந்தது. அந்த பின்புலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் நிகழ்ந்தது. அன்றைய காலத்தில், இலங்கையின் மீதான இந்தியத் தலையீட்டுக்கு பின்னால் அன்றைய உலக அரசியல் சூழலும், அது தொடர்பான விசேட கரிசனைகளும் இருந்தமை எந்தளவிற்கு உண்மையோ - அதேயளவிற்கு தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்னும் கரிசனையும் இருந்தது. ஆனால் அந்தத் தீர்வு, இந்தியாவினால் தீர்மானிக்கப்படும் ஒன்றாகவே இருக்க வேண்டுமென்பதிலும் இந்தியா ஆர்வம் கொண்டிருந்தது. ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில் இந்தியாவின் தீர்மானங்களோடு இணைந்து சென்றுதான் பிரச்னைக்கான தீர்வை தமிழர் தேடியிருக்க வேண்டும். ஆனால் அது நிகழவில்லை.

பிற்காலங்களில் இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் எட்ட நிற்கும் நிலைப்பாட்டையே பின்பற்றியது. யுத்தம் இடம்பெற்ற காலம் முழுவதும், இந்தியா தமிழர் விடயத்தில் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிக்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியா தொடர்பில் ஆதரவான கருத்துக்களை அவ்வப்போது வெளிப்படுத்திய போதிலும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் உரையாடக்கூடிய நிலையில், இந்திய மத்திய அரசாங்கங்கள் இருக்கவில்லை. இறுதிக் காலத்தில் நிலைமைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பியபோது, நெருக்கடியிலிருந்து தப்பவேண்டுமென்றால், இந்தியாவின் அரவணைப்பை பெறுவதைத் தவிர வேறு எந்தவொரு வழியும் இல்லை என்பதில் அன்ரன் பாலசிங்கம் தெளிவாக இருந்தார். இந்த அடிப்படையில்தான் இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு நேர்காணல் வழங்குவதன் ஊடாக, இந்தியாவுடன் ஒரு புதிய பயணத்திற்கான சிறிய வாய்ப்பு கிடைக்குமா என்று தேடினார். கடந்த காலத்தில் இடம்பெற்ற சில கசப்பான சம்பவங்களுக்கு வருந்தி மன்னிப்புக் கோருவதாகவும் கூறினார். ஆனால் பாலசிங்கம் அவ்வாறு கூறிய காலத்தில், பாலத்திற்கு கீழ் அதிகம் நீர் ஓடிவிட்டது. ஒரு தத்துவக் கூற்றுண்டு - அதாவது, ஆற்றில் ஒரே இடத்தில், இரண்டு தடவைகள் கால் பதிக்கக்க முடியாது.

2009 இற்கு பின்னர் மீண்டும் இந்தியாவை நோக்கிச் செல்லும் பயணத்தை சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் மேற்கொண்டனர் - ஆனால் அதனை சரியாகச் செய்தனரா என்னும் கேள்விக்கு இன்று வரையில் பதிலில்லை. கடந்த நாடாளுமன்ற தேர்தல் பிரசாரங்களின் போது - சம்பந்தன் இவ்வாறு கூறினார் - எங்களுக்கு பின்னால் பிராந்திய சக்தியான இந்தியா இருக்கின்றது. அவ்வாறு கூறிய சம்பந்தன், உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க, சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவராக கருதப்படும் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்புக்கு, மாவையின் மகனின் திருமணத்தை காரணம் காண்பித்து, தமிழ் மக்களின் புத்திசாலித்தனத்தையே நகைப்புக்கிடமாக்கினார்.

அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்று கூறும் போது, முதலில் தமிழ் தேசிய கட்சிகள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி - எந்தத் தீர்விற்கு இந்தியா அழுத்தங்களை கொடுக்க வேண்டும்? - இந்தியா அதன் கொள்கை நிலைப்பாடாக முன்வைத்துவரும், அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்ட விடயமா அல்லது சம்பந்தன் கடிதத்தில் உச்சரித்த சமஷ்டியா? சமஷ்டியென்றால் அதற்கு இந்தியாவின் பக்கத்திலிருந்து எந்தவொரு அழுத்தமும் வரப்போவதில்லை - ஏனெனில் அது இந்தியாவின் நிலைப்பாடு இல்லை.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன் .”*

**- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)**



# வர்த்தமானி வெளியீட்டுக்கு முன்னர் சீனி வரி குறித்த தகவல் கசிந்ததா?

*கொழும்பு, நவ. 05*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சீனி வரியை அதிகரித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு முன்னர் அது தொடர்பான தகவல்கள் சில சீனி இறக்குமதியாளர்களுக்கு கிடைத்திருந்ததா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.*

*கடந்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்த சீனியில், பாதியளவு ஒரு நிறுவனத்தினால் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த சந்தேகம் எழுந்துள்ளது.*

*கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் 18 இறக்குமதியாளர்களால் 22,832 மெற்றிக் தன் சீனி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.*

*அவற்றில் 10,210 மெற்றிக் தொன் சீனி ஒரு நிறுவனத்தினால் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டவை என சுங்கத் திணைக்களத்தின் தகவல்களின் ஊடாக தெரியவந்துள்ளது.*

*இந்தநிலையில், நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான விஷேட பண்ட வரி 25 சதத்திலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கு முன்னர் ஒரு கிலோகிராம் சீனிக்கு 50 ரூபாவாக காணப்பட்ட விசேட பண்ட வரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் 25 சதமாக குறைக்கப்பட்டது.*

*எவ்வாறாயினும், வரியை குறைத்ததன் மூலம் சீனி இறக்குமதி நிறுவனம் ஒன்று வரம்பற்ற இலாபத்தை ஈட்டியுள்ளதாகவும், இதனூடாக அரசாங்கத்திற்கு 16 ஆயிரத்து 708 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டது. (அ)*

# தொழிற் சந்தைக்கு ஏற்றவாறு பல்கலை கலைப் பட்டப்படிப்பு

## சுரேன் ராகவன் கூறுகிறார்

*கொழும்பு, நவ. 05*

*தொழிற் சந்தைக்கு ஏற்றவாறு பல்கலைக் கழக கலைப் பட்டப் படிப்புகளை மேம்படுத்த உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.*

*கலைத்துறையில் 314 பட்டப்படிப்புகள் உள்ளதாகவும் அந்தப் பட்டப் படிப்புகளின் தரத்தைப் பேணுவதுடன், தற்போதைய வேலை உலகிற்கு ஏற்றவாறு பொருத்தமான அபிவிருத்திகள் செய்யப்படும் என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.*

*இதன்படி, அடுத்த ஆண்டு இறுதிக்குள் தொடர்புடைய அபிவிருத்திகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமை ச்சர் சுரேன் ராகவன் குறிப்பிட்டார்.*

*மேலும், சமூகத்தின் தற்போதைய வேலைத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தொழில்முறை மற்றும் நடைமுறை திறன்களை வளர்த்து மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்றும் சுரேன் ராகவன் தெரிவித்தார். (அ)*

# வருடாந்தம் 4,000 பேருக்கு மார்பக புற்றுநோய்

*கொழும்பு, நவ. 05*

*வருடாந்தம் 4,000 புதிய மார்பக புற்றுநோய்கள் கண்டறியப்படுவதாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் ஆலோசகர் புற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் நுராத் ஜோசப் தெரிவித்தார்.*

*கடந்த ஆறு மாதங்களாக, மார்பக புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தேவையான டிராஸ்டுஜூமாப் உள்ளிட்ட மருந்துகள் போதுமான அளவு மருத்துவமனைகளில் இருப்பதாக அவர் கூறினார்.*


*மேலும், இந்த புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் குணப்படுத்த முடியும் என்றும், முன்கூட்டியே கண்டறிவதால் மார்பகங்களை அகற்றுவதை தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படும் மார்பக புற்றுநோயாளிகளில் 90 வீதமானவர்கள் குணமடைந்துள்ளதாகவும், நாடு முழு வதும் அமைந்துள்ள ‘சுவனாரி’ கிளினிக்குகளில் கலந்துகொள்வதன் மூலம் இந்நோயை ஆரம்பத்திலேயே கண்டறிய முடியும் எனவும் அவர் கூறினார்.*

*ஒரு பெண் 20 வயதுக்கு மேல் இருக்கும் போது மார்பகங்களை சுயபரிசோதனை செய்வது அவசியம் என்றும், 40 வயதைத் தாண்டியவுடன் மேமோகிராஃபிக்கு செல்ல வேண்டியது அவசியம் என்றும் மருத்துவர் வலியுறுத்தினார். ஒரு கட்டி இருப்பது, அசாதாரண வடிவத்தில் மாற்றம், முலைக் காம்பிலிருந்து நிறமற்ற சுரப்பு வெளியேறுதல், அறிகுறிகள் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# நினைவு நல்லது வேண்டும்...

பகிர்வு -102

**கணபதி சர்வானந்தா**

வீழ்ந்தவரைத்தான் தூக்கிவிடலாம் என்று எண்ணுகிறீர்களா? நேராக நிமிர்ந்து நிற்பவரைக் கூடத் தூக்கிவிடலாம் என்று நான் எண்ணுகிறேன். எப்படி? ஒருவனின் மனோபலத்தைத் தூண்டுவதன் மூலம், எண்ணங்களை சீர்படுத்துவதன் மூலம் அதனைச் செய்யலாம்.உடலால் நிமிர்ந்து நிற்பவனைவிட எண்ணங்களால் நிமிர்ந்து நிற்வனே அதிக சாதனைகளைச் செய்கிறான். இதனை நீங்கள் மாற்று வலுவுடையவர்களிடம் அதிகம் காணலாம். மாற்றுத் திறனாளிகளில் பலர் சாதனையாளர்களா மிளிர்வதற்கும் இதுவே காரணமாகின்றது.

ஒரு மனிதனின் வார்த்தைகளால் அது முடியும் என நான் நம்புகிறேன். அர்த்தமுள்ள வார்த்தைக்கு அத்தனை பெரிய பலம் உண்டு என ஆன்றோர் நம்பியதால் தான் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற பல நூல்கள் எழுதப்பட்டன. ஆரம்பப் பள்ளியில் தொடங்கும் அவ் நூல்களின் பயன்பாடு என்பது ஒருவனின் வாழ் நாள் வரை தொடரும் என்பதற்கு அது கொண்ட அடிப்படை நெறிமுறையே காரணமாகும்.

நம்பிக்கை, மனோபலம் என்ற இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்க முடியாதென்பது அனுபவம். ஒன்றிலிருந்து மற்றொன்று பிறப்பது, ஒன்றுக்கு மற்றொன்று தூணாக இருந்து வெற்றியை நோக்கி முன்னேற உதவுவது எனப் பலவற்றைச் சொல்லலாம். ஓட்டப்பந்தயத்தில் ஓடும் வீரர் திடீரென விழுந்து காயம் ஏற்பட்டாலும், அதை பொருட்படுத்தாமல், வெற்றி இலக்கை அடைய எழுந்து ஓடுகிறாரே..! அந்தத் துணிச்சலைத் தான் மனோபலம் என்கின்றனர். ஒரு செயலைச் செய்து முடிக்கலாம் என்ற எண்ணத்தைத் தருவது நம்பிக்கை.அதனை வெற்றிகரமாக ஒரு சாதனையாக்க உதவுவதே மனோபலம். சுருக்கமாக நாம் ஒரு செயலைச் செய்ய முற்படும்போது வரும் தடைகளைத் தாண்டி ஓட மனோபலம் தேவைப்படுகிறது.

“திருக்குறள் தரும் தன்னம்பிக்கை” ஒன்ற தலைப்பிட்டதொரு இணையக் கட்டுரையிலே முனைவர் இளசை சுந்தரம் இவ்வாறு எழுதுகிறார்.

‘வரலாறு என்பது வந்து போனவர்களின் தொகுப்பு அல்ல, சாதனைகளை தந்து போனவர்களின் தொகுப்பு’ என்பார்கள். திருக்குறளை நமக்குத் தந்ததன் மூலம் வரலாற்று சாதனையாளர்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுகிறார் திருவள்ளுவர். ஒரு நூல் ஆடையாகும் அதிசயத்தை கண்டதுண்டா? திருக்குறள் என்ற ஒரு நூல் தமிழன்னைக்கு ஆடையானது.

தன்னம்பிக்கை பற்றிய புதுக்கவிதை ஒன்று இவ்வாறு வினா எழுப்புகிறது. ‘நம்பிக்கையை நீங்கள் எங்கு வைத்தீர்கள்? – புலியின் பல்லில் வைத்தீர்கள், நரியின் கொம்பில் வைத்தீர் கள், ஜோசியரின் சொல்லில் வைத்தீர்கள், ராசிக்கல்லில் வைத்தீர்கள், கிளியின் கூட்டில் வைத்தீர்கள் ஜாதக ஏட்டில் வைத்தீர்கள். அந்த நம்பிக்கையை நீங்கள் உங்களுக்குள் வைத்தீர்களா?

திருக்குறளில் தன்னம்பிக்கையைக் கவனிப்போம்.

“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல்” என்கிறது குறள்.

காலம் என்ற சிற்பி நம்மை செதுக்கிக் கொண்டிருக்கிறான். அதில் நாம் சிற்பமா? சிதறி விழும் கற்களா? நாம் சிற்பமாகத் தான் ஆக வேண்டுமா? அதற்கு சாதனைகள் செய்ய வேண்டும். சவால்களை சந்திக்காமல் சிகரங்களை தொடமுடியாது. அதற்கு தேவையானவற்றை பட்டியலிடுகிறார் திருவள்ளுவர்.

நாம் மேற்கொள்ளப் போகிற செயலின் தன்மை என்ன? அதை நிறைவேற்ற என்னிடம் உள்ள ஆற்றல் என்ன? எதிர்கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை உள்ளதா? எதிரியின் வலியினைப் புரிந்து கொண்டோமா? நமக்கு துணை நின்று உற்சாகப்படுத்துகிற நட்பு வட்டம் உள்ளதா? இவற்றில் முக்கியம், என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை.

“முடியுமா? என்பது மூடத்தனம், முடியாது என்பது கோழைத்தனம். முடியும் என்பதே மூலதனம்” இந்த உந்து சக்திதான் ஒருவனை வெற்றியாளனாக்குகிறது. எல்லாம் நன்றாக வாய்த்திருந்தும், இது என்னால் முடியாது என்று நடுங்குகிறவனுக்கு வெற்றி இல்லை. எவன் எந்த செயலில் நம்பிக்கை வைத்திருக்கிறானோ அவன் அதுவாகவே ஆகிறான் என்கிறது கீதை. எண்ணங்களின் தன்மைக்கேற்ப நமது செயல் அமைகிறது. ஊக்கத்துக்குத் தக்கவாறு உயர்கிறோம்.

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு” என்கிறது திருக்குறள்.... தண்ணீரின் உயரத்துக்குத் தக்கபடி உயரும் தாமரை போல உள்ளத்துக்குத் தக்கபடி உயர்கிறது எண்ணம். தன்னம்பிக்கை கொண்டவன், அதிலே நிலைத்திராமல் தடுமாறினால் சிக்கல் தான். அவனை அப்படித் தடுமாறவைக்கிற எதிரிகள் யார்? குறித்த வேலையை குறித்த நேரத்தில் செய்து முடிக்காமல் தள்ளிப்போடுகிற தாமத குணம், மறதியினால் வரும் கேடு, சோம்பல், நீண்ட நேரத் தூக்கம் இவைகள் தான். நம்பிக்கையை நடத்திவைக்கும் நன் மருந்து தளராத தன்னம்பிக்கை நமக்குள் இருக்குமானால், அதனை நிறைவேற்றித் தரும் வல்லமையை முயற்சி வழங்கும்.

ஒரு அரங்கத்தில் கைதட்டும் போட்டி ஒன்று நடந்தது.நீண்ட நேரம் கைதட்டுபவருக்கு ஒரு பரிசு உண்டு என அறிவித்தனர். மற்றவர்கள் எல்லாம் கைதட்டி ஓய்ந்த பிறகு ஒரு தைட்டு ஒலித்துக் கொண்டே இருந்தது. பரிசு வழங்க அவரை மேடைக்கு அழைத்தார்கள்.இரண்டுபேர் மேடை ஏறினார்கள்.ஒருவருக்குத்தான் பரிசு ஒன்று சொல்லப்பட்டது. அப்போது அவர்களுள் ஒருவர் பேசினார். ஒரு பரிசு போதும். நாங்கள் இருவரும் தான் சேர்ந்து கைதட்டினோம்.இரண்டு பேரும் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள்.போரில் நான் எனது இடது கையை இழந்தேன். இவர் தனது வலது கையை இழந்தார். இருந்தும் எம்மிடமிருந்த இழக்காத கைகளை இணைத்து வைத்து வெற்றி கொண்டோம். மிகுதியாக இருந்த எமது கைகளோடு ஒரு மூன்றாவது கையும் எமக்கு உதவியது. அது தான் நம்பிக்கை. – என அவர் பதிவு முற்றுப்பெறுகிறது.

## இந்தவார ராசிபலன் 05.11.2023 - 11.11.2023



ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 19
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : அஷ்டமி




சிலர் சொத்துகளை வாங்க முயற்சிப்பார்கள். தொழிலில் அபார வளர்ச்சியை அடைவீர்கள். பணம் வந்து சேரும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. வியாபாரிகள் சில்லறை வணிகத்தில் கவனம் செலுத்துவீர்கள். விவசாயிகள் தானியங்களை விற்று லாபம் அடைவீர்கள். அரசியல்வாதிகள் திட்டங்களில் வெற்றியடைய தொண்டர்களின் பங்கு உதவியாக இருக்கும். கலைத் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.




உயர்ந்தவர்களோடு பழகுவீர்கள். புதிய பொறுப்புகளைப் பெறுவீர்கள். உடன்பிறந்தோரிடம் சுமுகமான உறவு ஏற்படும். வழக்குகளில் சாதகமான தீர்ப்புகள் உண்டு. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் மனமறிந்து நடப்பீர்கள். வியாபாரிகளின் முயற்சிகள் வெற்றி பெறும். விவசாயிகள் கால்நடைகளுக்கு சிறிது செலவு செய்ய நேரிடும். அரசியல்வாதிகளின் பெயரும் புகழும் உயரும். கலைத் துறையினர் சக கலைஞர்களுக்கு உதவிகளைச் செய்வீர்கள். மாணவர்களுக்கு வெற்றிகள் கிடைக்கும்.




குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இல்லத்துக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். மனதில் இறைசார்ந்த சிந்தனைகள் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு உண்டு. வியாபாரிகள் சில நுட்பங்களைக் கற்பார்கள். விவசாயிகளுக்கு பிறரின் ஆதரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் தொண்டர்களை அரவணைத்துச் செல்வார்கள். கலைத் துறையினருக்கு சாதகமான சூழல் உண்டாகும். பெண்களுக்கு மனக் கவலைகள் நீங்கி, புத்துணர்வு உண்டாகும்.




சரியான இலக்குகளை நிர்ணயித்து உழைப்பீர்கள். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். மனதை ஒருமுகப்படுத்துவீர்கள். வழக்குகளில் சாதகமான முடிவு கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பேச்சை கேட்டு நடப்பீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் இணக்கமாக நடப்பீர்கள். விவசாயிகள் நல்ல லாபம் காண்பீர்கள். அரசியல்வாதிகள் மக்கள் நலனில் கவனம் செலுத்துவீர்கள். மாணவர்கள் உற்சாகத்துடன் இருப்பார்கள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பாகப்பிரிவினையில் வேகத்துடன் நடப்பீர்கள். தொழிலைத் திறம்பட நடத்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள். வியாபாரிகளுக்குக் கூட்டுத் தொழிலில் ஒற்றுமை கிடைக்கும். விவசாயிகள் புதிய குத்தகை முயற்சிகளில் இறங்குவீர்கள். அரசியல்வாதிகள் மாற்றுக்கட்சியினரிடம் சுமுகமான உறவை வளர்ப்பீர்கள்.மாணவர்கள் உற்சாகத்துடன் செயல்படுவீர்கள்.




உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள். திட்டமிட்ட பணிகளைச் செய்வீர்கள். பிறர் விஷயத்தில் தலையிட வேண்டாம். புதிய நட்புகளால் நன்மை உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பிரச்னைகளை தாங்களே தீர்த்துக்கொள்வார்கள். வியாபாரிகள் நற்பெயர் எடுப்பார்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளின் முயற்சிகள் வெற்றி பெறும். கலைத் துறையினர் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். பெண்கள் நவீன உபகரணங்களை வாங்குவீர்கள்.




உடல் ஆரோக்கியம், மன வளம் மேன்மையடையும். தொழிலில் பிரச்னைகள் குறையும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். உயர்பதவிகளில் இருப்போரின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் விழிப்புடன் பணியாற்றுவார்கள். வியாபாரிகள் புதிய முதலீடுகளைப் பெறுவார்கள். விவசாயிகள் லாபம் ஈட்டுவார்கள். அரசியல்வாதிகள் புதிய ஆதரவாளர்களைப் பெறுவார்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.




அரசு சலுகைகள் கிடைக்கும். வருமானம் உயரத் தொடங்கும். உடன்பிறந்தோரிடம் இருந்த மனக்கசப்புகள் தீரும். தெய்வ வழிபாட்டில் மனதை ஈடுபடுத்தவும். உத்தியோகஸ்தர்கள் குழப்பங்களுகக்குத் தீர்வு காண்பீர்கள். வியாபாரிகள் திருப்பங்களைக் காண்பீர்கள். விவசாயிகள் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள். அரசியல்வாதிகள் வெளியூர் பயணம் செல்ல நேரிடும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.




திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். பெற்றோருடன் ஒற்றுமையாகப் பழகவும். உத்தியோகஸ்தர்கள் சக பணியாளர்களின் பதவி உயர்வுக்கு உதவுவீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவீர்கள். அரசியல்வாதிகள் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். கலைத் துறையினருக்கு மூத்தோரின் ஆதரவு கிடைக்கும்.




குடும்பத்தில் வசதிகளைப் பெருக்குவீர்கள். எடுத்த காரியங்களை வெற்றியுடன் முடிப்பீர்கள். வருமானம் சிறப்பாக இருக்கும். புதிய சேமிப்புகளில் சேர்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் தங்கள் நிலையைத் தக்க வைப்பீர்கள். வியாபாரிகள் அசாதாரண நிலையைக் காண்பார்கள். விவசாயிகள் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்பார்கள். அரசியல்வாதிகள் போட்டிகளைச் சமாளிப்பார்கள். கலைத் துறையினர் பண விஷயத்தில் கவனமாக இருப்பீர்கள். மாணவர்களின் விருப்பங்கள் நிறைவேறும்.




வருமானம் சிறப்பாக இருக்கும். கடன்கள் வசூலாகும். காணாமல் போன பொருள்கள் திரும்பக் கிடைக்கும். விவேகத்துடன் பணியாற்றுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் புதிய வேலைகளுக்கு மாறுவீர்கள். வியாபாரிகள் புதிய யுக்திகளைக் கையாளுவார்கள். விவசாயிகள் புதிய பயிர்களை பயிரிடுவார்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் ஆதரவைப் பெறுவார்கள். கலைத் துறையினர் மூத்தவர்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். பெண்கள் புதிய சேமிப்புகளில் ஈடுபடுவீர்கள்.




தொழிலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை நிலவும். குடும்பத்தினரும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். குழந்தைகள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு வேலைச் சுமை குறையும். வியாபாரிகள் கடையை பிரதானமான இடத்துக்கு மாற்றுவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளின் புகழ் உயரும். கலைத் துறையினரின் படைப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். பெண்கள் வசீகரப் பேச்சால் பிறரை கவருவார்கள். மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும்.

# தேவார திருப்பதிகங்களை காப்பாற்றிய இராஜராஜ சோழன்!

அனந்த பாலகிட்ணர்

இராஜராஜ சோழனுடைய 1038 சதய விழா அப்பெருமன்னர் தமது அரசாட்சியின் தலைநகரமாகக் கொண்டிருந்த தஞ்சாவூரில் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகின்றது.

ஒவ்வொரு இனமும் தனது மொழி, கலை, கலாசாரம் என்பவற்றை இலக்கியங்கள், கட்டிடக்கலை மற்றும் அவற்றினூடாக சிற்பங்கள், ஓவியங்கள் என்பவை மூலமாகவே காலத்தால் அழியாத ஞாபகச்சின்னங்களாக நிலை பெற வைத்துள்ளன.


தமிழர்களது வாழ்வியல் சார்ந்த விழுமியங்களை காலத்தால் அழியாதவையாக நீடித்து நிலைக்கவைத்த பெருமை மாமன்னர் இராஜராஜ சோழனையே சாரும்.




தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் தமிழின் பெருமையையும் தமிழர்களுக்கே உரித்தான சைவசமயத்தின் பெருமையையும் ஒருங்கே பறைசாற்றுவதாக இருக்கின்றது. தமிழின் பெருமை என்று குறிப்பிடும் போது பிரகதீஸ்வரர் கோயில் தமிழரது அழகியல் உணர்வை கட்டிடக்கலை அம்சம் மூலமாக பிரதிபலிக்கின்ற அதேசமயம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்கையின் புவியியல் சார்ந்த சகல சவால்களையும் எதிர்கொள்ள வைப்பதாகவும் காணப்படுகின்றது.

இராஜராஜ சோழ மன்னருடைய ஆட்சிக்காலம் கி மு 985ஆம் ஆண்டு முதல் கி மு 1014ஆம் ஆண்டுவரை இடம்பெற்றிருந்தது. மன்னர்களது பிறந்த திகதிகளைவிட அவர்களது நட்சத்திரங்களே அவர்களது பிறப்பைக் குறிப்பவையாக அமைந்துள்ளன. எனவே இராஜராஜ சோழனின் நட்சத்திரம் சதயமாகும். இதன் காரணமாகவே ஐப்பசி மாத சதய நட்சத்திரத்தில் அவரது அவதாரம் பெருவிழாவாக கொண்டாடப்படுகின்றது.

இராஜராஜ சோழனின் மாட்சிமையின் சின்னமாக மட்டுமல்ல. தமிழர்களின் மதமான சைவ சமயத்தின் சிறப்பையும் உணர்த்தி நிற்கின்றது தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில். இக்கோயில் ராஜராஜேஸ்வரம், தஞ்சைப்பெரிய கோயில், தஞ்சை பெருவுடையார் கோயில் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. கி மு 1003-ம் ஆண்டில் தஞ்சைப்பெரியவர் கோயில் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின. பின்னர் ஏழு வருடங்களில் அதாவது கி.மு 1010ஆம் ஆண்டில் அப்பெருங்கோயிலின் நிர்மாணம் முழுமை பெற்றதுடன் அக்கோயிலில் உச்சிக்கலசத்துக்கு இராஜராஜ சோழனே தனது இரு கரங்களினாலும் மகா கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தியிருந்தார்.



தஞ்சைப்பெரிய கோயில் உச்சியில் வைக்கப்பட்டுள்ள கலசம் மட்டுமல்ல. ஆலயத்தின் கற்கள் அனைத்துமே கருங்கற்கள் என்பது சிறப்பம்சமாகும்.

உச்சிக்கோபுர கலசம் 216ஆம் அடி உயரத்தில் வைக்கப்பட்டுள்ளது. கருங்கல்லினாலான அதன் எடை 81 தொன்களாகும். யானைகள் மூலமாகவே அந்த கலசம் படிப்படியாக மேலே கொண்டு செல்லப்பட்டுள்ளதை கட்டடக்கலை நிபுணர்களின் ஆய்வுகள் மூலமாக அறிய முடிகின்றது. இதுதவிர ஏறத்தாள மூவாயிரம் யானைகள் வரை கருங்கற்களை நிர்மாணப்பிரதேசத்துக்கு கொண்டுவரவும் அவற்றை ஏற்றி இறக்கவும் பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றுத்தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறு பயன்படுத்தப்பட்ட யானைகளில் பல இராஜராஜ சோழனின் பலம் வாய்ந்த யானைப்படைகளில் இருந்த நன்கு பழக்கப்பட்ட யானைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் புரிவதற்காக மட்டுமல்ல. கட்டடப்பணிகளுக்காகவும், வேறு பாரந்தூக்கும் நடவடிக்கைளுக்காகவும், மங்களகரமான நடவடிக்கைகளுக்காகவும், நெல் வயல்களில் வைக்கேலைப் போரடிப்பதற்காகவும் யானைகள் அக்காலத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

தஞ்சைப் பெரிய கோயில் நிர்மாணத்தை பற்றி விபரிப்பதானால் சிமெந்து அல்லது கற்களை ஒன்றுடன் ஒன்று பொருத்துவதற்கான பூச்சுக்கள், இராசயனக்கலவைகள் எதுவும் நிர்மாணப்பணிகளுக்காக பயன்படுத்தப்படவில்லை.

பிரகதீஸ்வரர் ஆலய நிர்மாணத்தின் குறிப்பிட்டுச் சொல்லப்படக்கூடிய மற்றுமொரு அதிசயிக்கத்தக்க விடயமென்னவெனில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அத்தெய்வீக நிர்மாணம் நிலைத்து நிற்பது மாத்திரமல்ல. பிரகதீஸ்வரம் ஆலய பிரதேசத்தில் அதன் நிர்மாணத்தையடுத்து ஆறு தடவைகள் நிலநடுக்கம் அதிர்வலைகளோடு பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அப்பெருங்கோயிலுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதிருப்பதே அதன் மகத்துவத்தை போற்றவைப்பதாக இருக்கின்றது.

இதேவேளை சைவ சமயத்தவர்களைப்பொறுத்தவரை இராஜராஜ சோழன் குறித்து நன்றியுணர்வோடு பெருமைப்படக்கூடிய மற்றுமொரு விடயமென்னவெனில் அவரது முயற்சியினாலேயே பல்லவ காலத்திலே நாயன்மார்களால் பாடப்பட்ட தேவார திருப்பதிகங்கள் பல எமக்கு கிடைக்கப் பெற்றன. தேவார திருப்பதிகங்கள் அனைத்துமே சிவன் மீது நாயன்மார்களால் பாடப்பட்டவை. இருந்தபோதிலும் அவற்றை தூர்ந்து சிகிலமடைந்து போகாது காப்பாற்றித்தந்தவரும் இராஜராஜ சோழன் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவார திருப்பதிகங்கள் கவனிப்பாரற்று நடராஜப்பெருமானின் சிதம்பரம் திருத்தலத்தில் இருப்பது பற்றி இராஜராஜ சோழன் அறிந்து கொண்டார். ஓலைச்சுவடிகளாக இருந்த அத்தேவார திருப்பதிகங்களை சிகிலமடையாது காப்பாற்றி பாதுகாக்க இராஜராஜ சோழன் முன்வந்தார். இதற்கு நம்பியாண்டார் நம்பி என்ற சிவபக்தரின் உதவியை இராஜராஜ சோழன் நாடினார். இராஜராஜ சோழனின் கவனத்தை பெறுகின்ற தருணத்தில் ஓலைச்சுவடிகள் பலவற்றில் காணப்பட்ட தேவார பதிகங்களில் ஏராளமானவை கறையான்காளால் அரிக்கப்பட்டிருந்தன. அத்துடன் தில்லை வாழ் அந்தணர்கள் இராஜராஜ சோழன் தேவார திருப்பதிகங்களை பாதுகாக்க எடுத்த முயற்சிகளுக்கு அவரது உயர்வான நோக்கத்தை அறியாது எதிர்க்க முற்பட்டனர். ஆனால் அம்மாமன்னர் தனது பலத்தை பிரயோகித்தோ அல்லது வேறு பலவந்தமான வழிவகைகளைக்கையாண்டோ தேவார திருப்பதிகங்களை காப்பாற்ற முன்வரவில்லை.

மிகுந்த பக்திபரவசமான முறையில் தேவார திருப்பதிகங்களை காப்பாற்றும் முயற்சியில் இராஜராஜ சோழன் இறங்கினார். நாயன்மார்கள் நால்வரினதும் சிலைகளுக்கு உரிய கிரியைகளைச் செய்து அவற்றை சிதம்பரம் வீதிகள் வழியாக ஊர்வலமாக கொண்டுவரச் செய்தார். இதனைக்கண்ட தில்லை வாழ் அந்தணர்கள் மன்னரது சிவபக்தியை வியந்து பாராட்டி நாயன்மார்களது தேவார திருப்பதிகங்களை அவர் கையகப்படுத்தி மெருகூட்ட உறுதுணையாக நின்றனர்.

இதன்பின்னரே தேவார திருப்பதிகங்கள் இலக்க வரிசையில் பன்னிரு திருமுறைகளாக வடிவம் பெற்றன.

இன்று தேவார திருப்பதிகங்களை மனமுருகப்பாடுகின்றோம். ஆனால் இராஜராஜ சோழன் தேவார பதிகங்களை காப்பாற்ற தவறியிருந்தால் பக்திமயமானவையாக மட்டுமல்ல. உயரிய தமிழ் வளத்தையும் தெய்வீகத்தன்மையோடு கொண்டிருந்த தேவார பதிகங்கள் இன்று சைவத்தமிழ் உலகிலிருந்து மறைந்திருக்கும். அத்துடன் சைவத்தமிழர்கள் என்ற அடையாளமும் இல்லாது போயிருக்கும்.

மாமன்னர்கள் தாம் சார்ந்த மொழி, மதம் பிரதேசம் என்பவற்றின் மேன்மைக்காகவே யுத்தங்களில் குதித்தார்கள். தமது அரசாட்சியை விரிவுபடுத்தினார்கள். ஆனால் மாமன்னர் இராஜராஜ சோழன் தனது அரசாட்சியை விரிவுபடுத்த மட்டுமல்ல. தமிழின் மீதும் அதன் பக்திமார்க்கத்தின் மீதும் உயிரினும் மேலான பற்றுக்கொண்டு காலமறிந்து இயங்கியதன் காரணமாகவே இன்று சைவத்தமிழர்களது அடையாளம் பெரிதும் காப்பாற்றப்பட்டுள்ளது. இல்லையேல் வெறுமனே சமஸ்கிருதத்தின் மீதே தமது கரிசனையை வெளிப்படுத்தியிருந்த அன்றைய கால பிராமணர்களினால் தெய்வீகத் தமிழில் வெளிவந்திருந்த தேவார பதிகங்களை உரிய வகையில் காப்பாற்றியிருக்க முடியுமோ என்பது கூட சந்தேகமே. ஏனெனில் இராஜராஜ சோழர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிராவிட்டால் அவரால் காப்பாற்றப்பட்ட பெருமளவிலான தேவார பதிகங்கள் கூட வகை தொகை தெரியாது அழிந்து நாசமாகியிருக்கும்.

இராஜராஜ சோழனுக்குப்பிற்பட்ட காலத்தில் மேற்கேயிருந்து கிறிஸ்தவ மதம் மற்றும் இஸ்லாமிய மதம் என்பவை ஆசிய நாடுகளில் பரவின. ஆனால் இராஜராஜ சோழன் காலத்திலும் அவரது புதல்வர் இராஜேந்திர சோழர் காலத்திலும் சைவ சமயம் தெற்காசியாவில் இந்தோனேஷியா வரை பரவியிருந்தமைக்கு சோழர் காலப்பாணியிலான பலதரப்பட்ட அம்சங்கள் இன்று வரை சான்று பகர்பவையாக இருக்கின்றன.

இராஜேந்திர சோழர் தந்தைவழி நின்று தமது ஆட்சியின் விஸ்தரிப்பை இலங்கைக்கு கீழே மாலைதீவு வரை கூட வியாபித்திருந்தார் என்று வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

தமது அரசாட்சியை விஸ்தரிக்க பலம் மிக்க கடற்படையையும் இராஜேந்திர சோழர் உருவாக்கியிருந்தார்.

அவரது கடற்படையில் பலமிக்க ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கப்பல்கள் இருந்தன.

இராஜேந்திர சோழரது கடற்படையின் மகத்துவத்தை அறிந்தே இன்றைய இந்திய கடற்படை தென்னிந்தியாவில் நாகபட்டினத்திலுள்ள தனது தளத்திற்கு இராஜேந்திர சோழன் கடற்படை தளம் என்று பெயரிட்டுள்ளது.

சோழர்கால கடற்படைக்கப்பல்கள் அனைத்துமே மிக நுட்பமான முறையில் போர்த்திறன் படைத்தவையாக அமைக்கப்பட்டிருந்தன. உலகில் உள்ள ஏனைய கடற்படைகளுக்கு முன்னதாகவே கடல் யுத்தங்களுக்காக கப்பல்களை அமைத்து வியத்தகு யுத்தங்களை இராஜராஜ சோழன் மேற்கொண்டிருந்தார்.

இலங்கையில் கூட சோழர்கால எச்சங்களாக பொலன்னறுவையிலுள்ள சிவாலயங்கள் மற்றும் அக்காலப்பகுதியில் கட்டப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகள் என்பவை விளங்குகின்றன.

எனவே தனது பராக்கிரமத்தின் மூலமாக தமிழையும் சைவத்தையும் தூர்ந்து போய் அழிந்துவிடாது பாதுகாத்த மாமன்னரே இராஜராஜ சோழன்.

மாமன்னர்கள் எப்போதுமே பராக்கிரமசாலிகளாகவே வரலாறுகளில் இடம்பிடிப்பது வழக்கமாகும். ஆனால் இராஜராஜ சோழன் தனது பராக்கிரமத்தின் மூலம் தமிழினத்தின் மாண்பினை வீரதீரச்செயல்கள் மூலமாக மட்டுமல்ல. பக்தி மார்க்கம் மூலமாகவும் பாதுகாத்து கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய மூத்த தமிழ் என்ற பெருமையையும் நிலை நாட்டியுள்ளதையே தற்போது அப்பெருமன்னரின் 1038ஆவது சதய தினத்தில் நினைவு கூர வேண்டியுள்ளது.

# மன்னிப்புக்கோரலுடன் மறந்துவிடக்கூடியதா சுமணரத்ன தேரரின் இனவெறிக்கூச்சல் ?



வீரகத்தி தனபாலசிங்கம்



**உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்ட நிலையில் அதைவிடவும் மோசமான இனக்கலவரம் குறித்து சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் மட்டக்களப்பு விகாராதிபதி போன்ற பிக்குமாரும் பேசுகிறார்கள். வரலாற்றில் இருந்து பாடங்கள் படிக்கப்படுவதில்லை என்பதே வரலாற்றில் இருந்து படிக்கக்கூடிய பாடமாக இருக்கிறது....!**

மட்டக்களப்பில் நடுவீதியில் நின்று தென்னிலங்கையில் உள்ள தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டிக் கொலைசெய்வேன் என்று இனவெறிக் கூச்சலிட்ட சிறிமங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் சில தினங்கள் கழித்து தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்பதாக காணொளி ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

மிகுந்த மனவேதனையில் இருந்தாலேயே அவ்வாறு பேசியதாகவும் ஊடகவியலாளர்கள் சிலர் தன்னை வம்புக்கு இழுக்கும் நோக்கில் செயற்பட்டதால் தான் ஆவேசமடைந்ததாகவும் காணொளியில் கூறிய அவர் அந்த வேளையில் தான் தெரிவித்த சில கருத்துக்களை சில தமிழ் கட்சிகள் தமிழ் மக்களைக் குழப்புவதற்கு பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

சுமணரத்ன தேரர் இனங்களுக்கு இடையில் வன்முறையை தூண்டிவிடக் கூடிய கூச்சலைப் போட்டது இதுதான் முதற்தடவை அல்ல. ஏற்கெனவே அவர் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார். சில தடவைகள் அவர் ஆபாச வார்த்தைகளைக் கூட பேசியதை காணொளிகளில் நாம் பார்த்திருக்கிறோம். ஓரிரு வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதபோதகர் ஒருவரை அவர் தாக்கிய சம்பவமும் உண்டு. அவர் அட்டகாசம் செய்த பல சம்பவங்கள் பொலிசார் முன்னிலையில் இடம்பெற்றவை. சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுக்கும் வகையில் நடந்து கொள்வது பெரும்பாலும் அவரது வழக்கமாக இருக்கிறது.

மதகுரு ஒருவருக்கு இருக்கவேண்டிய பண்புகளுடன் சுமணரத்ன தேரர் நடந்துகொள்வதில்லை என்றாலும் அத்தகைய நடத்தைகளுக்காக அவர் எந்தப் பிரச்சினையையும் எதிர்நோக்கியதாக இல்லை. அவரது அட்டகாசங்களும் ஆவேசப்பேச்சுக்களும் மகாசங்கத்துக்கு பெரும் அவமானம் என்பது குறித்து பௌத்த உயர்பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கூட கவலைப்படுவதாக தெரியவில்லை.

வழமை போன்றே இத்தடவை அவர் தென்னிலங்கையில் உள்ள தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டிக்கொலை செய்வேன் என்று பேசியது தொடர்பிலும் எந்தப் பிரச்சினையும் அவருக்கு வரவில்லை.

தேரரைப் போன்று வேறு மதங்களைச் சேர்ந்த மதகுருமார் வன்முறையை தூண்டும் வகையில் பேசியிருந்தால் பொலிசார் எவ்வாறு நடந்துகொண்டிருப்பார்கள் என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தேரரின் பேச்சு குறித்து அவருக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று தமிழ் அரசியல் தலைவர்கள் குரலெழுப்பிய போதிலும் அரசாங்கத் தரப்பில் இருந்து எந்தப் பிரதிபலிப்பையும் காணக்கூடியதாக இருக்கவில்லை. அவரின் அட்டகாசம் குறித்து சிங்கள அரசியல்வாதி எவரும் கண்டனம் தெரிவித்ததாக எந்த செய்தியும் வரவில்லை.

ஆனால், திடீரென்று சுமணரத்ன தேரர் அந்த கொலைவெறிப் பேச்சுக்காக தமிழர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டிருக்கிறார். அவரது நடத்தை சட்ட நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் செய்துவிடக்கூடியதல்ல என்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் பிரச்சினை கிளப்பினால் ஏதாவது ஒரு நடவடிக்கையை எடுத்தேயாக வேண்டிவரும் என்றும் அரசாங்கத் தரப்பில் இருந்தோ அல்லது மகாசங்க உயர்பீட வட்டாரங்களில் இருந்தோ கூறப்பட்டிருக்கக்கூடிய பின்னணியில் தான் அவர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கக் கூடும் என்று நம்பலாம்.

தமிழ் மக்கள் எளிதில் மறந்துவிடவோ மன்னித்துவிடவோ கூடியதல்ல தேரரின் ஆவேசக்கூச்சல். இனங்களுக்கு இடையில் வன்முறையைத் தூண்டிவிடக்கூடிய ஆவேசப் பேச்சுக்களை நிகழ்த்திவிட்டு எவரும் மறுநாள் மன்னிப்புக் கேட்டு காணொளி ஒன்றை வெளியிட்டுவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்கிற அளவுக்கு ஒரு தவறான உதாரணத்தை வகுப்பதற்கு தேரர் சம்பந்தப்பட்ட இந்த சம்பவத்தை அனுமதித்துவிடக்கூடாது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், அண்மைக்காலத்தில் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் குரோதத்தை தூண்டிவிடக் கூடியதாக அமைந்ததாகக் கருதப்பட்ட வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளை திரும்பிப் பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

கடந்த வருடம் டிசம்பரில் தலதா மாளிகையை இழிவுபடுத்தும் வகையில் சமூக ஊடகச் செயற்பாட்டாளரான சேபால் அமரசிங்க என்பவர் யூரியூப் மூலமான தனது நிகழ்ச்சிகளில் கருத்து வெளியிட்டதற்காக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பௌத்தர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்திய தனது செயலுக்காக அவர் மகாநாயக்க தேரர்களிடம் மன்னிப்புக் கேட்டதை அடுத்தே அவர் விளக்கமறியலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

கிறிஸ்தவ மதப்போதகரான ஜெரோம் பெர்னாண்டோ கடந்த மே மாதம் பௌத்த மதத்தை மாத்திரமல்ல, இந்து, இஸ்லாமிய மதங்களையும் இழிவுபடுத்தும் கருத்துக்களை வெளி யிட்டு பிரசங்கம் செய்த காணொளி சமூக ஊடகங்களில் பரவியதை அடுத்து பெரும் சர்ச்சை மூண்டது.



ஜனாதிபதி விக்கிரமசிங்க விசாரணைக்கு உத்தர விட்டபோதிலும், தனக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்படுவதற்கு முன்னதாக போதகர் நாட்டில் இருந்து வெளியேறி விட்டார். இன்றுவரை அவர் நாடு திரும்பவில்லை. அவர் நிதிமோசடிகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற கோணத் தில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

கொழும்பின் பிரபலமான பெண்கள் கல்லூரியொன்றில் கடந்த ஏப்ரில் முதலாம் திகதி “ஏப்ரில் முட்டாள் தினச் சவால்” என்ற நிகழ்ச்சியில் நகைச்சுவை மேடைப் பேச்சாளரான நடாஷா எதிரிசூரிய என்ற இளம் பெண் கலைஞர் புத்த பெருமானின் குழந்தைப் பராயத்தை கிண்டல் செய்யும் தொனியில் கருத்துக்களை தெரிவித்த காணொளி சமூக ஊடகங்களில் வெளியானது.

அதையடுத்து மூண்ட சர்ச்சைக்கு மத்தியில் நடாஷா வெளிநாடு செல்வதற்கு முயற்சித்தபோது விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார். சில வாரகால விளக்கமறியலுக்கு பிறகு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த சம்பவங்களின்போது வெறுப்புப் பேச்சுக்கு எதிராக தென்னிலங்கையில் பரவலாக கிளம்பிய குரல்கள் தமிழர்களை துண்டுதுண்டாக வெட்டிக் கொலைசெய்வேன் என்று மட்டக்களப்பு விகாராதிபதி செய்த இனவெறிக் கூச்சலிட்டபோது ஒலிக்கவில்லை. பொதுவில் பௌத்த மதத்தையும் சிங்கள மக்களையும் புண்படுத்துபவையாக கருதப்படும் செயற்பாடுகளுக்கு வெளிப்படுத்தப்படும் ஆவேசமான எதிர்வினையை மற்றைய இனங்களையும் மதங்களையும் புண்டுத்தும் செயற்பாடுகள் விடயத்தில் காணமுடிவதில்லை.

சுமணரத்ன தேரர் மாத்திரமல்ல, அரசியல்வாதிகள் சிலரும் கூட அண்மைக் காலத்தில் இனங்களுக்கிடையில் வன்முறையைத் தூண்டிவிடக்கூடிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனக்கு இருந்த விருப்பத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க இவ்வருட முற்பகுதியில் வெளியிட்டபோது அவ்வாறு செய்ய முயற்சித்தால் இலங்கை இதுகாலவரை யில் கண்டிராத படுமோசமான இனக்கலவரம் மூளும் என்று முன்னாள் அமைச்சர்களான விமல் விரவன்ச, சரத் வீரசேகர மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அடிக்கடி எச்சரிக்கை செய்தார்கள்.

இனக்கலவரம் மூளும் என்று எச்சரிக்கை செய்வதை விடவும் நாட்டு மக்களில் ஒரு பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரை தூண்டிவிடும் மோசமான செயல் எதுவும் இருக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்தும் அவர்கள் இனங்களுக்கிடையில் குரோதத்தை வளர்க்கும் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

முன்னாள் பொதுப்பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் சிங்கள மக்களின் பொறுமைக்கு ஒரு எல்லையுண்டு என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். உள்நாட்டுப் போர் மூளுவதற்கு காரணமாக அமைந்த 1983 கறுப்பு ஜூலை இனவன்செயலுக்கு பிறகு நான்கு தசாப்தங்கள் கடந்த நிலையில் மீண்டும் ஒரு இனக்கலவரம் குறித்து இவர்கள் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.

கறுப்பு ஜூலையில் இருந்தும் மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போரில் இருந்தும் இவர்கள் எந்த படிப்பனையையும் பெற்றதாக இல்லை.

வியட்நாம் போர்க்காலத்தில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராக இருந்த றொபேர்ட் மக்னமாரா (பிறகு இவர் உலகவங்கியின் தவைராகவும் பதவி வகித்தார்) ஒரு தடவை கூறிய கூற்று ஒன்றே இச்சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது. வரலாற்றில் இருந்து பாடம் படித்துக்கொள்வதில்லை என்பதே நாம் வரலாற்றில் இருந்து பெற்றுக்கொண்ட பாடமாக இருக்கிறது என்று அவர் சொன்னார்.

சுமணரத்ன தேரரின் கொலைவெறிக் கூச்சல் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது குறித்து கண்டனம் தெரிவித்த தமிழ் அரசியல் தலைவர்கள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் கீழ் தேரரின் செயல் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று சுட்டிக்காட்டினார்கள். தமிழ்

(14ஆம் பக்கம் பார்க்க)

# வரவு - செலவு தோற்கடிக்கப்பட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்! ஜனாதிபதி தேர்தல் காலம் ஆகும்!

பனங்காட்டான்

வராது ஆனால் வரும், வரும் ஆனால் வராது என்று சொல்லப்பட்டு வந்த சீன சமுத்திர ஆராய்ச்சிக் கப்பல் எப்படியோ வந்தது. ஷி யென் என்ற இக்கப்பல் இந்தியாவின் எதிர்ப்புகளையும் மீறி இலங்கைக் கடலுக்குள் புகுந்ததுதான் அதன் வல்லமை.

சமுத்திர ஆராய்ச்சியில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் பின்னர் மேற் கொள்ளப்படவுள்ள ஆய்வுச் செயற்பாடு களுக்கு பயன்படுமென்று சீன நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எதற்கு அது பயன்படும் என்பதுவே இந்திய அரசை நிமிர வைக்கும் கேள்வி. இந்தக் கப்பலின் ஆய்வு நோக்கம் என்னவென்பது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தெரியாததல்ல. இக்கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். முக்கிய மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதே இதன் நோக்கம். ஆனால், வேறு சில விடயங்களையும் அவர் ராஜரீக முறையில் கையாண்டதாக இந்திய முன்னணி ஊடகமொன்று தெரிவித்திருந்தது.

அடுத்து இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் இந்த மாதம் முதல் வாரத்தில் கொழும்புக்கு விஜயம் செய்வதாக இருந்தது. அமைச்சர் ஜெய்சங்கர் காரணம் கூறாமலே திடுதிப்பென இலங்கையை விட்டுப் புறப்பட்டது போல அமைச்சர் ராஜ்நாத்சிங்கின் கொழும்பு விஜயமும் காரணம் கூறாமலே ரத்துச் செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் விஜயம் அமைந்தது. திருமலை விஜயம், யாழ்ப்பாண விஜயம் என்பவைகளுடன் கொழும்பில் இடம்பெற்ற 'மலையகம் 200' பெருநிகழ்வில் கலந்து கொள்வது பிரதானமானதாக இவ்விஜயத்தில் அமைந்தது.

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரத்தை பல கோடி ரூபாவில் புனரமைப்புச் செய்தது இந்தியா. இந்தியாவின் ஆதீனமொன்றின் நிரந்தர இருக்கையும் இங்கு உறுதி செய்யப்பட்டது.

1968ம் ஆண்டு திருமலை கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க புனித நகராகப் பிரகடனம் செய்தார். உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த மு.திருச்செல்வத்தை புறக்கணித்து தம்மிஷ்டப்படி டட்லி சேனநாயக்க பிரகடனம் செய்ததன் விளைவாக தமிழரசுக் கட்சியைச் சார்ந்த திருச்செல்வம் அமைச்சர் பதவியை துறந்தது ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னைய வரலாறு.



> யானை பலமான மிருகம். இதற்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால், கீழே விழுந்தால் இதனால் தானாக எழும்ப முடியாது. நான்கு பேர் சேர்ந்தால்தான் இதனை தூக்கிவிட முடியும். நன்றியற்ற இந்த யானை தனது இருப்பைத் தக்க வைப்பதற்காக தன்னைத் தூக்கி விட்டவர்களையே துவம்சம் செய்யத் தயங்காது. அரசியலும் இதுதான்

கோணேஸ்வர ஆலயப் பகுதியை சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றியமைக்க இப்போது தொல்பொருள் திணைக்களம் முயன்று வருவதும், இரத்தினபுரியைச் சேர்ந்த சுமார் ஐம்பது சிங்கள வணிகர்களை இங்கு அனுமதியின்றி வியாபாரம் செய்ய அனுமதித்திருப்பதும் தொடரும் வேளையில் இங்கு விஜயம் செய்த அமைச்சர் நிர்மலா சீதாராமன் கோணேஸ்வர ஆலயத்தை புனரமைத்து கருங்கல்லால் நிர்மாணிக்க இந்திய அரசு உதவுமெனக் கூறியிருப்பது சிங்கள அரசுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும்.

அதேசமயம் திருமலையிலும் யாழ்ப்பாணத்திலும் ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா வங்கிக் கிளைகளையும் அமைச் சர் திறந்து வைத்துள்ளார். யாழ்ப்பாணம் செல்லும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ராஜதந்திரிகளும் இலங்கை அரசின் நினைவழிப்புச் சின்னமாக அமைந்திருக் கும் ஆசியாவின் மிகப்பெரும் நூலகமான யாழ்.பொதுநூலகத்தைத் தரிசித் துச் செல்வது வழக்கம். சாம்பரிலிருந்து எழுந்த பீனிக்ஸ் பறவை போன்ற யாழ்.பொதுநூலகம் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக இருந்து வருகிறது.

நூலக எரிப்புக் கட்சியின் அடையாளமாக இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க. அமெரிக்கா, இந்தியா, சீனா என்ற எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கை சார்ந்து செல்லாது என்று அண்மையில் இவர் கூறியதை நிரூபிக்கும் வகையில் சீனக்கப்பலை அடுத்து இந்திய அமைச்சரின் வருகையை பார்க்க முடிகிறது.

இதன் இன்னொரு பக்கமாக அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மகாநாடு அமைந்தது. தங்கள் கட்சியின் பலத்தை ஆள்தொகையால் எடுத்துக்காட்ட இதன் தலைவர்கள் முனைந்து வெற்றி கண்டனர். கடந்த பொதுத் தேர்தலில் கூண்டோடு சரிந்து வீழ்ந்த இக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, தேசியப் பட்டியல் எம்.பி.யானதால், கட்சிக்கு நாடாளுமன்றில் ஓர் ஆசனம் கிடைத்தது.

மக்கள் பேரெழுச்சியால் கோட்டாபயவும் அவரது சகோதரர்களும், அவர்களின் பிள்ளைகளும் பதவிகளைத் துறந்ததும், எவருமே ஏற்க மறுத்த பிரதமர் பதவியை ரணில் ஏற்றுக் கொண்டதும், அதன் வழியாக ஜனாதிபதியானதும் கடந்த வருடத்தின் முக்கிய அரசியல் நிகழ்வு.

கட்சியின் மாநாடு சுகததாஸ அரங்கில் இடம்பெற்றபோது, இதன் முக்கியஸ்தர்களில் ஒருவரான அகில விராஜ் காரியவாசம் யானைக்கதை (யானையே ஐக்கிய தேசிய கட்சியின் சின்னம்) ஒன்றைக் கூறி ஆதரவாளர்களை கவர்ந்திழுக்க முயன்றார்.

"விழுந்த யானை தானாக எழுந்து நடக்க ஆரம்பித்துள்ளது. இதனை எவராலும் தடுக்க முடியாது" என்பது இவரின் உரை.

இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு சொற்கள், 'தானாக எழுந்து' என்பதும், 'இனித்தடுக்கவே முடியாது' என்பதும் கேள்விக்குரியவை.

அகில விராஜ் காரியவாசம் சொன்ன இதே கதையின் மூலம் வேறானது. "மிருகங்களில் பலமானது யானை. ஆனால் அது வீழ்ந்தால் தானாக எழும்ப முடியாது. நான்கு பேர் தூக்கி விட்டால்தான் விழுந்த யானையால் எழும்ப முடியும்...." என்று இத்தொடர் நீள்கிறது.

இந்த மூலக்கதையே ஐக்கிய தேசிய கட்சிக்கு மிகப்பொருத்தமானது. விழுந்த யானையை (ஐக்கிய தேசிய கட்சி) கோட்டாபயவும், ராஜபக்ஷக்களும்தான் தூக்கி விட்டனர். இப்போதும் அந்த யானை அவர்களின் ஆதரவில்தான் நடமாடுகிறது. வருங்காலத்தில் வேறு கூட்டத்துடன் சேர்ந்து இயங்க முயல்கிறது. ஆனால் இதனால் ஒருபொழுதும் தனியாக நடக்க முடியாது. அதற்கான கூட்டை உருவாக்குவதற்காக மற்றைய கட்சிகளை பிளவுபடுத்தி வருகிறது என்பதே யதார்த்தம்.

இதன் படிமுறையாகவே ஒவ்வொரு கட்சியாக (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட) தனது பலத்தை இது பிரயோகித்து வருகிறது. இப்போது ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவில் எஞ்சி இருப்பவர்களையும் பிரித்தெடுக்கும் முயற்சியில் அதற்குள்ளிருந்தே ஒருவரை தெரிந்தெடுத்து செயற்படுத்தி வருகிறது. அமைச்சரவை நியமனங்களின்போது பெரமுனவில் இல்லாதவர்களுக்கு இடமளிப்பதுகூட அதே யுக்திதான்.

உள்ளூராட்சி தேர்தல்களை ரத்துச் செய்தவர், மாகாண சபை தேர்தல்களை மறுத்து வருபவர் ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டில் வைத்து அடுத்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் எனவும், அதற்கடுத்து நாடாளுமன்ற தேர்தல் எனவும் ஜனநாயக தேர்தல்களை முன்னறிவித்தார். 2025ல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்கள் என்றும் அறிவித்துள்ளார்.

இவரது அறிவிப்பை நம்பிய பல கட்சிகளும் அபேட்சகர் தெரிவு, தேர்தல் கூட்டு என்று அலைய ஆரம்பித்துள்ளன. பெரமுனகாரர்களுக்கு போதிய அமைச்சுப் பதவிகள் வழங்காதுவிட்டால் இந்த மாதம் 14ம் திகதி சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தை தாம் ஆதரிக்கப் போவதில்லையென பெரமுனவின் சிலர் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென பெரமுனவினர் ரணிலிடம் கோரப் போவதாகவும் செய்திகள் சொல்கின்றன.

இவை எதுவுமே ரணிலை அசையச் செய்யாது. அவர் சொன்னதுபோல ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என்பதுகூட சந்தேகத்துக்குரியது. கட்சிகளை திசை திருப்பி அல்லாட வைப்பதற்காகவே தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

பெரமுனவினர் சொல்வதுபோல வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்காது அது தோற்கடிக்கப்படுமானால் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றம் கலைக்கப்படும். இடைக்காலத்துக்கு தமக்கு விருப்பமான ஓர் அமைச்சரவையை ஜனாதிபதி நியமிக்க சட்டத்தில் இடமுண்டு. ஆனால், ஜனாதிபதிப் பதவியில் மாற்றம் இருக்காது.

அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் எப்போது இடம்பெறுமென்று எவராலும் கூறமுடியாது. அந்தத் தேர்தலில் இப்போதுள்ள எம்.பிக்களில் எத்தனை பேர் வெற்றி பெறுவர் என்றும் நம்பிக்கையாகச் சொல்ல முடியாது. வரவு செலவுத் திட்டம் நிறைவேறுமானால் ரணில் நினைப்பவையே தொடர்ந்து இடம்பெறும். எனவே எதுதான் நடைபெற்றாலும் ரணிலுக்கு ஒன்றுதான். அது அவருக்கான வெற்றியானது.

எதிர்ப்பவர்கள் தலையில் மண்ணை அள்ளிக் கொட்ட யானை தயாராகிறது. விழுந்து கிடந்த தன்னை தூக்கி விட்ட பெரமுனவை பதம் பார்க்க அது ஆரம்பித்துள்ளது. வெற்றியும் தோல்வியும் ரணிலுக்கு ஒன்றே. அவர் பதவிக்கு உடனடியாக ஆபத்தில்லை. சூழ்ச்சி அரசியல் என்பது இதுதான்.





# இந்தியாவில் எதிரணிகள் உருவாக்கிய ‘இந்தியா’ கூட்டணி ஆட்டம் காணுகிறதா?




ஜனநாயகம் வலுவாக இருப்பதற்கு ஆளுங்கட்சி மட்டுமல்ல, எதிர்க்கட்சியும் வலிமையாக இருக்க வேண்டும். மத்திய ஆட்சியில் இருக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியின் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மாற்றாக, வலுவான கூட்டணியை அமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் இறங்கியது வரவேற்புக்குரிய ஒன்றாகப் பார்க்கப்பட்டது. பாஜகவுடன் ஒப்பிடும் அளவுக்கு எண்ணிக்கை பலம் இல்லையென்றாலும், தேசிய அளவில் அதற்கு நிகரான வாக்கு வங்கியும், அனைத்து மாநிலங்களிலும் கிளைகளும் கொண்டிருக்கும் கட்சியாக காங்கிரஸ் திகழ்கிறது என்பதில் யாருக்கும் இருவேறு கருத்து இருக்க முடியாது.

28 கட்சிகளை மும்பையில் ஒரே மேடையில் ஒருங்கிணைத்து ‘இந்திய தேசிய அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக் கூட்டணி’ (இந்தியா) என்கிற பெயரில் காங்கிரஸால் முன்மொழியப்பட்டது. அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் மக்களவைத் தேர்தலில் பாஜகவை எதிர்கொள்ளவும், ஆட்சியில் இருந்து அகற்றவும் கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள் சூளுரைத்துப் பிரிந்தன. பல குழுக்கள் அறிவிக்கப்பட்டன. விரைவிலேயே இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஒருங்கிணைந்து பேரணிகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மும்பையில் கூடிய ‘இந்தியா’ கூட்டணியால் அதற்குப் பிறகு ஒருங்கிணைந்து இயங்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, ஐந்து மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில் ஒரே கூட்டணியாக களம் காணவும் முடியவில்லை. கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயான கருத்துவேறுபாடுகளும், பரஸ்பர குற்றச்சாட்டுகளும் ‘இந்தியா’ கூட்டணியின் ஒற்றுமையையும் நம்பகத்தன்மையையும் கேள்விக்குறியாக்கி இருக்கின்றன.

மும்பையில் கூடிப்பிரிந்த ஒருசில நாள்களில் மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸூம், இடதுசாரிகள் - காங்கிரஸ் கூட்டணியும் ஒருவரை மற்றவர் விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். மார்க்சிஸ்ட் கட்சியின் மத்திய குழு ‘இந்தியா’ கூட்டணியில் இருந்து விலகி, தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துவிட்டது.

நடைபெற இருக்கும் ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் ராஜஸ்தானில் 17 தொகுதிகளிலும், மத்திய பிரதேசத்தில் 4 தொகுதிகளிலும், சத்தீஸ்கரில் 3 தொகுதிகளிலும் மார்க்சிஸ்ட் கட்சி தனது வேட்பாளர்களை களமிறக்கி இருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சத்தீஸ்கரில் 14, ராஜஸ்தானில் 12, மத்திய பிரதேசத்தில் 9 இடங்களில் இடது முன்னணி சார்பில் வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறது.

காங்கிரஸ் இந்த மாநிலங்களில் தங்களைக் கூட்டணியில் இணைத்துக் கொள்ளவில்லை என்கிற ஆதங்கத்தை இடதுசாரிகள் பகிரங்கமாகவே வெளியிட்டிருக்கிறார்கள். இடதுசாரிகள் மட்டுமல்ல, ஆம் ஆத்மி கட்சியும் தனது வேட்பாளர்களை களமிறக்கி இருப்பது மட்டுமல்லாமல், பல தொகுதிகளில் பல முனைப் போட்டிக்கு வழிவகுத்திருக்கிறது.

உத்தர பிரதேசத்தின் அண்டை மாநிலமான மத்திய பிரதேசத்தின் எல்லையோர மாவட்டங்களில் கணிசமான செல்வாக்கு பெற்றிருக்கிறது சமாஜவாதி கட்சி. அந்தக் கட்சியுடனான கூட்டணிப் பேச்சுவார்த்தை முறிந்தது மட்டுமல்லாமல், அதன் தலைவர் அகிலேஷ் யாதவ் குறித்து தனிப்பட்ட முறையிலான கருத்துகளை காங்கிரஸ் தலைவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

சமாஜவாதி கட்சியைப் போலவே மத்திய பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் தனக்கென வாக்குவங்கி வைத்திருக்கும் பகுஜன் சமாஜ் கட்சியையும் கூட்டணியில் சேர்த்துக்கொள்ள காங்கிரஸ் மறுத்துவிட்டது. அதன்விளைவாக, பல தொகுதிகளில் ஏற்பட்டிருக்கும் பல்முனைப் போட்டிகள் பாஜகவுக்கு சாதகமானால் வியப்படையத் தேவையில்லை.

காங்கிரஸ் செல்வாக்குடன் இருக்கும் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஹரியாணா, உத்தரகண்ட், ஹிமாசல பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் ‘இந்தியா’ கூட்டணியில் இருக்கும் ஏனைய மாநில கட்சிகளின் வாக்குகளால் தனக்குப் பெரிய ஆதாயம் இருக்காது என்று கருதுகிறது காங்கிரஸ். அதே நேரத்தில் தனது வாக்குவங்கி குறைவாகவே இருந்தாலும் பிகார், ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பாஜகவை வீழ்த்த கூட்டணியில் காங்கிரஸ் அவசியம் என்பதால், மாநிலக் கட்சிகள் தனக்குக் கணிசமான மக்களவைத் தொகுதிகளை அந்த மாநிலங்களில் ஒதுக்க வேண்டும் என்று விழைகிறது.

அதிக இடங்களைக் கைப்பற்றி நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கும் சக்தியாக வலம்வர மாநிலக் கட்சிகள் விரும்புகின்றன. அதனால், மிகக் குறைந்த இடங்களை மட்டுமே காங்கிரஸூக்கு வழங்க அவை தயாராக இருக்கின்றன. அப்போதுதான், ஒருவேளை ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை பெற்றால், பிரதமர் பதவியோ, அதற்கு அடுத்த நிலையில் உள்ள முக்கியமான அமைச்சர் பதவிகளோ பெற முடியும் என அவை கருதுகின்றன.

‘இந்தியா’ கூட்டணியில் உள்ள தேசியவாத காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் போன்ற சில கட்சிகள் காங்கிரஸில் இருந்து அதன் வாக்கு வங்கியுடன் பிரிந்து உருவானவை. சமாஜவாதி கட்சி, ஐக்கிய ஜனதா தளம், ராஷ்ட்ரீய ஜனதா தளம், ஆம் ஆத்மி கட்சி, சிவ சேனை, இடதுசாரிகள் உள்ளிட்டவை கொள்கை ரீதியாக காங்கிரஸ் எதிர்ப்பை முன்வைத்து செயல்பட்டவை, வளர்ந்தவை.

இந்தக் கட்சிளையெல்லாம் ‘இந்தியா’ என்கிற பெயரில் காங்கிரஸ் ஒருங்கிணைக்க முற்பட்டாலும், அவை காங்கிரஸின் வளர்ச்சியை விரும்புமா என்பது சந்தேகம். அதனால்தான் காங்கிரஸூக்கு அதிக இடங்கள் ஒதுக்க அவை தயாராக இல்லை. இதில் விதிவிலக்காக இருப்பது தமிழகத்தின் திமுக மட்டுமே.

சட்டப்பேரவைத் தேர்தல்களில் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பு அதிகரிக்குமே தவிர, குறையாது. மாநிலக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாத ‘இந்தியா’ கூட்டணியால் பாஜகவை எதிர்கொள்ள முடியாது என்பதை காங்கிரஸ் உணர வேண்டும். (தினமணி)



# ஆழ்கடலில் ஓர் அதிசய உயிரினம்!

சிதம்பரம் இரவிச்சந்திரன்



இதுவரை மனிதன் ஆழ்கடலில் அறியாத இடத்தில் ஓர் அதிசய உயிரினத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த புதிய நத்தை மீன் (Snailfish) வகை சூடொலிபாரிஸ் (Pseudoliparis) இனத்தைச் சேர்ந்தது. 2022ல் தொடங்கிய இந்த ஆய்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சமீபத்தில் நடத்தப்பட்ட இரண்டு மாத ஆழ்கடல் ஆய்வின்போது விஞ்ஞானிகள் பயன்படுத்திய தானியங்கி வாகனங்களின் புகைப்படக் கருவியில் இந்த மீனின் படங்கள் பதிவாகியுள்ளது. 8000 மீட்டருக்குக் கீழ் ஆழ்கடலில் வாழும் ஒரு புதிய உயிரினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறை.

தென்மேற்கு ஜப்பானில் இஸூ - ஒகஸ்வாரா பள்ளத்தில் கடலின் 8336 மீட்டர் ஆழத்தில் இந்த உயிரினம் வாழ்வது தெரிய வந்துள்ளது. இந்த மீன் கண்டுபிடிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு சுடொலிபாரிஸ் பெலியிவி (Pseudoliparis belyaevi) இனத்தைச் சேர்ந்த வேறு இரண்டு மீன்களின் புகைப்படமும் ஆழ்கடல் வாகனத்தின் புகைப்படக் கருவியில் பதிவாகியிருப்பது தெரிய வந்தது. இவை ஜப்பானின் அதே பகுதியில் 8022 மீட்டர் ஆழத்தில் நீந்திக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.

மேற்கு ஆஸ்திரேலியாவின் மைண்டரூ (Minderoo) பல்கலைக்கழகத்தின் ஆழ்கடல் ஆய்வுப் பிரிவு விஞ்ஞானிகள் டோக்கியோ பல்கலைக் கழகத்தின் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் விஞ்ஞானிகளுடன் இணைந்து இந்த ஆய்வை நடத்தினர்.

8000 மீட்டர் ஆழமுள்ள ஜப்பான் கடற்பகுதி, 9300 மீட்டர் ஆழமுடைய இஸூ-ஒகஸ்வாரா பள்ளம் மற்றும் 7300 மீட்டர் ஆழமுடைய யுக்கியு (Ryukyu) பள்ளம் ஆகிய பகுதிகளில் வாழும் ஆழ்கடல் மீனினங்கள் பற்றி அறிய இந்த ஆய்வுகள் நடந்தன. உலகில் ஆழ்கடலில் வாழும் மீனினங்கள் பற்றி அறிய நடைபெற்று வரும் பத்தாண்டு கால ஆய்வின் ஒரு பகுதியாக இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆளில்லா ஆழ்கடல் மிதவை லேண்டர் வாகனங்கள் மற்றும் அவற்றில் பொருத்தப்பட்ட அதி நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய, மீன்களைத் தன்பால் ஈர்க்கும் தன்மையுடைய தூண்டில் கேமராக்களை பயன்படுத்தி விஞ்ஞானிகள் இந்த ஆய்வுகளை மேற்கொண்டனர். ஆழ்கடல் பள்ளங்களின் ஆழமான பகுதிகளில் இக்கருவிகள் மிதக்க விடப்பட்டன.

உலகில் இதுவரை தேங்கிய நீர் முதல் கடலின் ஆழமான பகுதிகள் வரை 4000 நத்தை மீன் இனங்கள் வாழ்வதாக அறியப்பட்டுள்ளது. இந்த வகையைச் சேர்ந்த சில மீனினங்கள் பெற்றுள்ள சிறப்புத் தகவமைப்பின் மூலம் இதே பேரினத்தைச் சேர்ந்த மற்ற நத்தை மீன்களைக் காட்டிலும் ஆயிரம் மீட்டர் ஆழத்தில் இவை வாழ்கின்றன என்று இந்த ஆய்வுப்பயணத் திட்டத்தின் தலைவர் மற்றும் மைண்டரூ ஆழ்கடல் ஆய்வுப்பிரிவின் நிறுவனர் பேராசிரியர் ஆலன் ஜெமிசன் (Prof Alan Jamieson) கூறியுள்ளார்.

**8000 மீட்டர் ஆழத்தில் வாழும் உயிரினத்தின் உடலமைப்பு எப்படி இருக்கும்?**

மேற்பரப்பில் இருப்பதை விட கடலின் எட்டாயிரம் மீட்டர் ஆழத்தில் அழுத்தம் எட்டு மடங்கு அதிகமாக இருக்கும். உலகின் மிக ஆழமான கடற்பகுதியில் வாழும் இந்த மீனின் படத்தில் இருந்து அது கரணைகள் போன்ற காப்பு புடைப்புகளுடன் கூடிய, முண்டுமுடிச்சுகள் உள்ள, வளைந்து நெளிந்த அமைப்புடன் கறுத்த நிறத்தில் பெரிய பற்கள் போன்ற பகுதியையும் சிறிய கண்களையும் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது என்று ஆலன் கூறியுள்ளார்.

இதன் கறுப்பு நிறத்திற்கும் இது வாழும் ஆழ்கடற்பகுதிக்கும் தொடர்பில்லை என்று கருதப்படுகிறது. அடிக்கடி காண முடிவதில்லை என்பதால் இது போன்ற ஆழ்கடல் உயிரினங்களின் சிறப்புத் தகவமைப்புகளை ஆராய்வது கடினமாக உள்ளது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவற்றின் உடலில் நீச்சல் சிறுநீர்ப் பைகள் (swim bladders) காணப்படுவதில்லை. இது இவை மிக ஆழமான கடலில் வாழ உதவுகிறது என்று நம்பப்படுகிறது.

உயர் அழுத்தம் உள்ள பகுதிகளில் உடலில் வாயுக்குழி போன்ற உடற்பகுதியைப் பெற்றிருப்பது மிகக் கடினம். இந்த மீன்கள் செதில்கள் அற்றவை. இதற்குப் பதில் இவை கூழ்மத் தன்மையுடைய அடுக்கைப் பெற்றுள்ளன. இது மீனின் உடற்செயலியக்கத்திற்கு உதவுகிறது என்று ஆலன் கருதுகிறார்.

கேமராவில் இளம் மீன் ஒன்றின் படமே பதிவாகியுள்ளது. மற்ற ஆழ்கடல் மீன்கள் போல் இல்லாமல் நத்தை மீனினங்களில் வளர்ந்த மீன்களை விட இளம் மீன்களே அதிக ஆழமுடைய பகுதிகளில் காணப்படுகின்றன.

8000 மீட்டர் ஆழத்திற்கும் அதிகமான பகுதிகளில் மிகச் சிறிய உயிரினங்களே அதிகமாக வாழ்கின்றன. இப்போது இஸூ-ஒகஸ்வாரா பள்ளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த மீன் இதற்கு முன் 2017ல் 8178 மீட்டர் ஆழத்தில் மரியான (Mariana) பள்ளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நத்தை மீன் வாழ்ந்த ஆழத்தை விட 158 மீட்டர் அதிக ஆழத்தில் வாழ்கிறது. இது ஒரு சாதனை ஆழம். 2017 ஆய்வையும் ஆலன் ஜெமிசனே நடத்தினார். ஜப்பான் ஆய்வுகள் மரியானா பள்ளத்தில் வாழும் நத்தை மீன் உலகில் மிக ஆழமான கடற்பகுதியில் வாழும் மீனினமாக இருக்காது என்று முன்பு கருதப்பட்டதை உறுதி செய்துள்ளது என்று ஆலன் கூறுகிறார்.

**கடலாழத்தில் ஓர் உயிரினத்தின் வாழ்க்கை**

ஆழ்கடல் வாழ் உயிரினங்களின் தகவமைப்பிற்கு வெப்பநிலை மற்றும் அழுத்தத்திற்கு முக்கிய பங்கு உண்டு. குளிர்ச்சி உள்ள பகுதிகளுக்குச் செல்லச் செல்ல தெளிவற்ற தன்மை அதிகமாகிறது. வெதுவெதுப்பான பகுதிகளுக்குச் செல்லச் செல்ல ஆழம் அதிகரிக்கிறது. ஜப்பான் பள்ளம் பசுபிக் பெருங்கடலில் மரியானா பள்ளத்திற்கு வட திசையில் தொலைவில் அமைந்துள்ளது.

இங்கு கடல் நீர் மரியானாவை விட சிறிதளவு அதிக வெப்பத்துடன் காணப்படுகிறது. இது நீரின் ஆழத்தில் வேறுபாடு ஏற்படுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 8200-8400 மீட்டர் ஆழத்தில் மீனினங்கள் வாழ்வது சாத்தியமற்றது என்று கருதப்பட்டது. மீன்கள் ஆஸ்மலைட் (Osmolyte) என்ற அழுத்தத்தை சமாளிக்கும் தன்மையுடைய திரவத்தை பெற்றுள்ளது.

மீன்களுக்கென்று தனி வாசனை ஏற்பட இதுவே காரணம். உயிரி வேதியியல்ரீதியாக மீன்கள் வாழும் ஆழத்திற்கும் இந்த திரவத்திற்கும் நேரடி தொடர்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. 8200-8400 மீட்டர் ஆழத்தில் வெப்பநிலை வேறுபாடு முக்கிய பங்கு வகிக்கிறது. செல்களில் உள்ள இந்த திரவத்தின் அடர்த்தி மேலும் அதிகரிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இது ஐசஸ்மோசிஸ் (Isosmosis) என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஆய்வின்போது 250 முறை ஆழ்கடல் மிதவை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த ஜப்பான் ஆய்வின்போது கேமராவின் சாளரப்பகுதி குறுகலாக்கப்பட்டது. ஒவ்வொருமுறை வாகனம் கடலின் 8336 மீட்டர் ஆழத்தில் நிறுவப்பட்டபோதும் இந்த மீன்கள் காட்சி தந்தன.

பூமியிலேயே ஆழமான பகுதியில் வாழும் இந்த மீனின் கண்டுபிடிப்பு இயற்கை என்னும் அற்புதக் கலைஞனின் படைப்பில் மனிதன் இன்னும் அறிய வேண்டியது எவ்வளவோ உள்ளது என்பதையே நினைவுபடுத்துகிறது!





# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ - 2023

**குரு அரவிந்தன்**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் விருது விழா சென்ற சனிக்கிழமை 28-10-2023 ரொறன்ரோவில் உள்ள ஸ்காபரோ சிவிக்சென்றர் அரங்கத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 10:00 மணியளவில் நிகழ்வில் கலந்து கொண்ட சில பிரமுகர்களால் மங்கள விளக்கேற்றப் பெற்றதைத் தொடர்ந்து, கனடா பண்ணும், தமிழ்த்தாய் வாழ்த்தும் செல்வி சோலை இராசகுமார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப்பெற்றது. தொடர்ந்து அமைதி வணக்கம் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து கனடா பழங்குடி மக்களின் அங்கீகாரம் வாசிக்கப் பெற்றது.

எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய துணைத்தலைவருமான எழுத்தாளர் குரு அரவிந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து தேனுஜா திருமாறன் ஆசிரியையின் மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து இணையத்தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து ‘கனடா தமிழ்



எழுத்தாளர் இணையத்தின் கடந்து வந்த பாதை’ என்ற தலைப்பில் உதயன் பத்திரிகை ஆசிரியரும், துணைச் செயலாளருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் உரை இடம் பெற்றது. அதைத்தொடர்ந்து விருது விழா மலர் வெளியிட்டு வைக்கப்பெற்றது. இந்த நிகழ்வில் வர்த்தகப் பிரமுகர்கள் சிலர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ்மொழியை, முத்தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதில் கடந்த 30 வருடங்களாகச் சிறப்பாகச் செயற்பட்டுவரும் கனடா தமிழ்



எழுத்தாளர் இணையம் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் மதிப்புமிக்க விருதான ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ வழங்கிச் சில மூத்த எழுத்தாளர்கள், மற்றும் ஆய்வாளர்களைச் சாதனையாளர்களாக மதிப்பளித்திருந்தது. இவர்களுடைய சாதனைகள் வெளியுலகிற்குத் தெரியாமல் முடக்கப்பட்டு விடக்கூடாது என்பதால், ஒருவர் வாழும்போதே அவரைக் கௌரவிக்கும் முகமாக அவர்கள் தமிழ் மொழி மற்றும் தமிழ்க்கலாச்சார வளர்ச்சிக்காக ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டி இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த விருது விழாவில் பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி, பேராசிரியர் கலாநிதி நாகராஜஐயர் சுப்பிரமணியன், முனைவர் பாலா சிவகடாட்சம், முனைவர் செல்வநாயகி சிறிதாஸ், திரு. தங்கராசா சிவபாலு, திரு. சின்னையா சிவநேசன், திரு பால குமாரசாமி (தேவகாந்தன்), சிந்தனைப்பூக்கள் திரு. பத்மநாதன், திரு தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் (சோக்கல்லோ சண்முகம்) திரு தெய்வேந்திரன் சண்முகராஜா (வீணைமைந்தன்) ஆகியோரே இம்முறை மதிப்பளிக்கப் பெற்றனர். விருதாளர்களுக்கு மதிப்பளிக்கப் பட்டபின் அவர்களின் ஏற்புரைகளும் இடம் பெற்றன.

1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர்களாக திரு. தெ. சண்முகராஜா, அமரர் திரு. திருமாவளவன், கவிஞர் வி. கந்தவனம், திரு சின்னையா சிவநேசன், திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு. த. சிவபாலு, அமரர் திரு. சிவநாயகமூர்த்தி, பேராசிரியர் இ. பாலசுந்தரம், திரு. குரு அரவிந்தன் ஆகியோர் இதுவரை இணை யத்தின் தலைவர்களாகப் பணியாற்றியதும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது.

இணைத்தின் முன்னாள் காப்பாளர் மகா ஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி, முன் னாள் காபப்பாளர் அமரர் திருமதி வள்ளிநாயகி இராம லிங்கம், தற்போதய காப்பாளர் கவிஞர் கந்தவனம், மற்றும் பண்டிதர் அமரர் மா.சே. அலெக்ஸாந்தர், அமரர் புலவர் மொகமட் ஹன்ஸீர் ஆகியோருக்கு எழுத்தாளர் இணையம் ஏற்கனவே வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கிக் கௌரவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அரசியல் துறையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் ஒன்ராறியோ போக்குவரத்து இணை அமைச்சர் திரு விஜே தணிகாசலம், மார்க்கம் நகரத்தின் 7 ஆம் வட்டாரப் பிரதிநிதி திருமதி ஜெனிற்றா நாதன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். விருதாளர்கள் பற்றிய அறிமுக உரையை திரு ரவி கனக சபை, திரு குமரகுரு கணபதிப்பிள்ளை, திரு எஸ். ஜெயானந்தசோதி, திருமதி. ரஜனி சுதாகரன், திரு அனுரா வென்சிலாஸ், திருமதி விமலாதேவி புஸ்ப நாதன், திரு கணபதி ரவீந்திரன் ஆகியோர் ஆற்றினர்.

இவர்களுடன் கனடாவில் பிறந்து வளர்ந்த இளம்



தலைமுறையினரான செல்வி ஆரணி ஞானநாயகன், செல்வன் தருண் செல்வம், செல்வி அர்ச்சயா மோகன்குமார் ஆகியோர் அழகு தமிழில் விருதாளர்களுக்கான அறிமுக உரை நிகழ்த்தியதைப் பலரும் பாராட்டியிருந்தனர். இதைத் தொடர்ந்து தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெற்றன. எழுத்தாளர் இணையத்தின் செயலாளர் திருமதி கமலவதனா சுந்தா அவர்களின் நன்றி உரையைத் தொடர்ந்து மதிய உணவுடன் விருது வழங்கும் நிகழ்வு சிறப்பாக நிறைவேறியது.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**இ.கோகுலன் குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** தமிழர்களின் கோரிக்கைகள் என்ன, அவர்கள் விரும்பும் தீர்வு என்ன ஆகிய விடயங்களை இந்தியாவின் மோடி அரசிடம் நாம் ஏற்கனவே எடுத்துரைத்துவிட்டோம். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் மோடி அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளாரே. இனி மோடி அவரது உத்தரவை ஏற்று அழுத்தம் கொடுப்பார் என்று நம்பலாமா?.

**வியுக்தியார்:** உங்கள் கேள்விக்கு பிறகு வருகின்றேன். ஆனால், நேரில் சந்திக்க வருமாறு மோடி கேட்டபோது தனக்குத் துணையாக வருவதற்கு மகளின் பாஸ்போட் காலவதியாகிவிட்டது. அதனால் வேறு திகதி வழங்குமாறு கேட்டவர் நமது சம்பந்தன். சிலநூாறு வாக்குகளால் தட்டுத்தடுமாறி திருமலையில் எம்.பி.யான நமது தலைவர், நூற்றிஐம்பது கோடி மக்களின் தலைவர் தன்னைச் சந்திக்க வருமாறு கேட்டபோது அதன தட்டிக்கழித்தவர். இப்போது அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவில்லை. உத்தரவு போட்டிருக்கிறார் என்பதை கவனிக்கவேண்டும். அண்மையில் அவரது தளபதி சுமந்திரன், சம்பந்தன் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடமுடியாத நிலையில் இருப்பதால் அவர் பதவிவிலகவேண்டும் என்று கேட்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். அதனை முறியடிக்கத்தான் மனுசன், இப்படியெல்லாம் அறிக்கை வெளியிட்டுதான் செயற்படக்கூடிய நிலையில் இருக்கிறேன் என்று காட்டுகிறார். அதனைப் போய் நீங்கள் சிரியசாக எடுத்துவிட்டீர்கள் என்று தெரிகின்றது கோகுலன்.

---

**எஸ். கார்த்திகேசு திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** மட்டக்களப்பு கால்நடை பண்ணையாளர்களால் சித்தாண்டி மகா வித்தியாலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு- கிழக்கில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்புகளை நிறுத்தாவிட்டால் வெகு விரைவில் பாரிய அளவில் மக்களைத் திரட்டி அரசாங்கத்திற்கு பதில் சொல்வோம் என்று தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** மனுசன் செய்யக்கூடிய ஆள்தான். ஆனால் மட்டக்களப்பு பண்ணையாளர்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக போராட்டம் நடத்துகிறார்கள். அவரோ இப்போதுதான் நேரில்போய் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். காணி அபகரிப்புக்களை நிறுத்தாவிட்டால் அரசாங்கத்திற்கு பதில் சொல்வோம் என்று எதுகைமோனை வைத்து பேசிய பல தலைவர்களை தமிழ் மக்கள் கண்டுவிட்டார்கள். ஆனால் சிறிதரன் பிறப்பதற்கு முன்னரே தொடங்கிய காணி அபகரிப்பு இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இவர்களின் ஆதரவு கிடைத்தால் தான் நல்லாட்சி அரசாங்கம் உயிர்வாழும் என்ற நிலையில் இருந்தபோது கூட கல்முனை செயலகத்தைக் கூட உருவாக்க முடியாதவர்கள், இப்போது காணி அபகரிப்பை நிறுத்தப்போவதாக சவால்விடுவதை என்னவென்று சொல்வது என்று தெரியவில்லை.

---

**ஜி. கிருசாந்தன், டிக்கோயா, ஹட்டன்.**

**கேள்வி:** மலையகத்தில் கம்பனி நடைமுறைகள் இல்லாமல் செய்யப்படும் என்றும், மலையக மக்களுக்கு பத்து பேர்ச் (ஒருபரப்பு) காணி உறுதியுடன் வழங்கப்படும் - என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரே. மலையக மக்களும் இனி தமது காணிகளில் சொந்தமாக வீடுகளை கட்டி வாழப்போகிறார்கள் என்று சந்தோசப்படலாமா?

**வியுக்தியார்:** மலையகத்தில் அவர்கள் குடியேறி இருநூறு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் இப்போதும் அவர்கள் அதே லயன்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு காணிகள் கிடைப்பது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால் நமது ஜனாதிபதி சொல்லிவிட்டார் என்றுதான் சந்தோசப்படமுடியவில்லை. அவர் ஜனாதிபதியாகி பதினைந்து மாதங்கள் ஆகப்போகின்றன. ஆனால் அவர் செய்வதாகச் சொன்ன எந்த விடயத்தைத்தான் செய்திருக்கிறார்?. அதனால் அவர் சொல்லாமலே இருந்திருந்தால் சில வேளை கிடைக்கும் என்று நம்பியிருக்கலாம். ஆனால் அவர் குறிப்பிட்டு சொல்வதுதான் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிட்டது.

---

**எஸ். நிதர்சன், மிருசுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** எமது பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள வளங்களை எமது மக்களே முழுமை யாக அனுபவிக்க வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது மக்களினால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை பூகோள அரசியலுடன் சம்பந்தப்படுத்துவது அடிப்படை அற்றது என்கிறாரே?

**வியுக்தியார்:** எமது வளங்களை எமது மக்களே அனுபவிப்பார்கள் என்று அவர் சொல்வது நம்பக்கூடியதுதான். கடல்பண்ணைகளை நமது மக்கள்தான் அமைக்கிறார்கள். அவர்கள் அதன்மூலம் பெருத்த லாபத்தை அடைவார்கள் என்பதும் உண்மைதான். ஆனால் இதனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஆதரிக்கும், அல்லது அவர் எப்போதும் கரிசனை கொண்டிருக்கும் இந்த அடிமட்ட மக்கள், எதிர்காலத்தில் மீன் உண்ணவும் முடியாதவர்களாக - இறக்குமதியாகும் மீன்களை வாங்க முடியாதவர்களாக அல்லவா போகப்போகின்றார்கள். அதுதான் உறுத்துகின்றது. அது சரி யாழ்ப்பாணத்தின் பனங்கிழங்கு விலை கூடினாலும் அதுகும் இந்த பாழாய்ப்போன பூகோள அரசியலுடன் சம்பந்தப்பட்டதுதான். கடலட்டை பண்ணைகளை பூகோள அரசியலுடன் சம்பந்தப்பட்டதல்ல என்பதுதான் புரியவில்லை.

# எகிப்தின் சினாய் தீபகற்பத்திற்கு காசா மக்களை வெளியேற்றும் திட்டம் : கசிந்த இஸ்ரேலின் இரகசிய ஆவணம் !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பலஸ்தீனர்களை முற்றாக ஒழித்து, வேறு நாடுகளுக்கு விரட்டி, நாடற்றவர்களாக ஆக்குவதுதான் இஸ்ரேலின் தற்போதைய திட்டம். இதைத்தான் பெஞ்சமின் நேதன்யாகு செப்டம்பர் மாத இறுதியில் ஐ.நா. பொதுச் சபையில் பகிரங்கமாக முன்வைத்தார். அகண்ட இஸ்ரேல் திட்டத்திற்கான ஆக்கிரமிப்பினால் பாலஸ்தீனர்களின் தாயகம் உருக்குலைகிறது.

பெஞ்சமின் நேதன்யாகு வெளியிட்ட வரை படத்தில் சிரியா மற்றும் லெபனானின் சில பகுதிகளையும் உள்ளடக்கி 'அகண்ட இஸ்ரேல்' (Greater Israel) என்று பெயரும் வைத்து விட்டார். இவருக்கு முன்பே இந்தாண்டு துவக்கத்தில் இஸ்ரேல் நிதியமைச்சர் பெசாலல் ஸ்மோட்ரிச், பாலஸ்தீனம், லெபனான், சிரியா ஆகிய மூன்று நாடுகளையும் அழித்து, ஒரு வரைபடத்தை வெளியிட்டார். இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இன்னோர் இஸ்ரேலின் இரகசிய ஆவணம் கசிந்தத்துள்ளது.

தரைவழிப் போரின் இறுதியில் காசா பகுதியின் பாலஸ்தீன மக்களை நிரந்தரமாக எகிப்து சினாய் தீபகற்பத்திற்கு இடமாற்றுவதற்கு இஸ்ரேலின் உளவுத் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ஆவணம் வெளி உலகிற்கு தற்போது கசிந்துள்ளது.

**எகிப்து சினாய்க்கு கட்டாய வெளியேற்றல்**

இஸ்ரேலிய கலாச்சார இதழ் 'மெகோமிட்' (Mekomit) அக்டோபர் 28 அன்று இஸ்ரேலின் உளவுத்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ஆவணத்தை வெளியிட்டது. காசாவை ஆக்கிரமித்து அதன் 2.3 மில்லியன் மக்களை எகிப்தின் சினாய் (Sinai Peninsula) தீபகற்பத்திற்கு மாற்ற வேண்டும் என்று அந்த ஆவணம் பரிந்துரைத்துள்ளது.

மேலும் இந்த நடவடிக்கைக்கு உதவ சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்றும் இஸ்ரேல் அரசு இதற்காக அழைப்பு விடுக்கும் என அந்த ஆவணம் வெளிப்படுத்தியது. ஆயினும் இஸ்ரேல் அரசு இந்த ஆவணத்தை மறுதலித்தாலும் இத்திட்டமே அகண்ட இஸ்ரேலின் கனவாகும்.

முதலில் அக்டோபர் 13 அன்று வெளியிடப்பட்ட ஆவணம், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான தற்போதைய போரின் முடிவில் காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களின் எதிர்காலம் தொடர்பான மூன்று மாற்று வழிகளை தெரிவிக்கிறது.

இஸ்ரேல் உளவுத்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் பத்து பக்க ஆவணம் உண்மையானது என்பதை உறுதிப்படுத்தினார். ஆனால் ஊடகங்களைச் சென்றடையக் கூடாது என்று குறிப்பிட்டார்.

ஒரு வலதுசாரி இஸ்ரேலிய செயற்பாட்டாளரின் கூற்றுப்படி, உளவுத்துறை அமைச்சகத்தின் ஆவணம் லிகுட் உறுப்பினர் ஒருவரால் கசிந்தது. ஆவணத்தை கசியவிடுவது, காசாவிலிருந்து பலஸ்தீனர்களை இடமாற்றம் செய்வதற்கான யோசனைகளை இஸ்ரேலில் உள்ள பொதுமக்கள் ஏற்கத் தயாராக இருக்கிறார்களா என்பதைக் கண்டறியும் முயற்சியாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்த ஆவணம் சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படையாகவும், போரின் விரும்பிய முடிவாக காசாவில் இருந்து குடிமக்களை இடமாற்றம் செய்வதை பரிந்துரைக்கிறது.

**அகண்ட இஸ்ரேலின் கனவு**

இதன்படி காசா பகுதியின் அனைத்து பலஸ்தீன குடியிருப்பாளர்களையும் சினாய்க்கு மாற்றுவதற்கான திட்டத்தை அடையாளம் காட்டுகிறது. தற்போது நிகழும் போரின் போது இஸ்ரேல் காசா மக்களை சினாய்க்கு வெளியேற்றவும், நாடுகடத்தப்பட்ட மக்களுக்கு இடமளிக்க வடக்கு சினாயில் கூடார நகரங்கள் மற்றும் புதிய நகரங்களை நிறுவவும் இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.





பின்னர் எகிப்திற்குள் பல கிலோமீட்டர்களுக்கு ஒரு மூடிய பாதுகாப்பு பிராந்தியத்தை உருவாக்கவும் இந்த ஆவணம் பரிந்துரைக்கிறது. நாடு கடத்தப்பட்ட பலஸ்தீனியர்கள் இஸ்ரேல் எல்லைக்கு அருகில் உள்ள எந்த பகுதிக்கும் திரும்ப அனுமதிக்கப்பட மாட்டார்கள்.


ஆயினும் ஆவணத்தின் உள் இருப்பு, அதன் பரிந்துரைகள் இஸ்ரேலின் பாதுகாப்பு ஸ்தாபனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் காலகட்டம் எதனையும் குறிக்கவில்லை.


**இஸ்ரேல் உளவு அமைச்சு**

இஸ்ரேல் லிக்கியுட் (Likud) கட்சியின் ஹிலா கமீலில் (Gila Gamliel) தலைமையிலான உளவுத்துறை அமைச்சகம், சுயாதீனமாக ஆய்வுகள் மற்றும் கொள்கை ஆவணங்களைத் தயாரிக்கிறது. அவை அரசாங்கமும் அதன் பாதுகாப்பு அமைப்புகளும் பரிசீலிக்க விநியோகிக்கப்படுகின்றன.

தற்போது இஸ்ரேல் அரசு இந்த ஆவணத்தை மறுதலித்தாலும், இஸ்ரேலிய அரசாங்க அதிகாரிகளின் சமீபத்திய அறிக்கைகள் மற்றும் காசாவில் இஸ்ரேலிய இராணுவத்தின் நடவடிக்கைகள் இந்த திட்டம் உண்மையில் செயல்படுத்தப்படுவதைக் காட்டுகின்றன. இத்திட்டமே அகண்ட இஸ்ரேலின் கனவாக அமைகிறது.

> எகிப்து சினாய் தீபகற்பத்திற்கு காசா மக்களை கட்டம் கட்டமாக வெளியேற்றும் இஸ்ரேலின் இரகசிய ஆவணம் வெளி உலகிற்கு கசிந்ததுள்ளது. ஆயினும் இஸ்ரேல் அரசு இந்த ஆவணத்தை மறுதலித்தாலும் இத்திட்டமே அகண்ட இஸ்ரேலின் கனவாகும்





அக்டோபர் 7 முதல், இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் பாலஸ்தீனியர்களுக்கு பலமுறை எச்சரிக்கைகளை விடுத்துள்ளனர். தெற்கு காசாவுக்குச் பொது மக்களை செல்வதற்கு முன்கூட்டியே தரையிறங்கும் ஆக்கிரமிப்பை இஸ்ரேல் நடாத்துகிறது.

உணவு, தண்ணீர், எரிபொருள் மற்றும் மின்சாரத்தை துண்டித்து, காஸா மீது இஸ்ரேல் முழு முற்றுகையை விதித்துள்ளது. 10,000 பாலஸ்தீன மக்கள் பெரும்பான்மையான பெண்கள் மற்றும் குழந்தைகள் பலியாகி உள்ளனர்.

தீவிர இஸ்ரேலிய குண்டுவீச்சுடன் இணைந்த முற்றுகை, காசாவை வாழத் தகுதியற்றதாக ஆக்குகிறது. தற்போதைய போரின் முடிவில் காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களின் எதிர்காலம் தொடர்பான மூன்று மாற்றுவழிகளை இந்த ஆவணம் தெரிவிக்கிறது.

**மூன்று கட்ட திட்டம்**

கட்டாய இடமாற்றத் திட்டம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில், காசாவில் உள்ள மக்கள் தெற்கு காசாவுக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் வடக்கு காசாவில் உள்ள இலக்குகளை மையமாகக் கொண்டிருக்கும்.

இரண்டாவது கட்டத்தில், காசாவுக்குள் இஸ்ரேலிய இராணுவம் தரையிறங்குவது தொடங்கும், இது முழுப் பகுதியையும் வடக்கிலிருந்து தெற்கே ஆக்கிரமிப்பதற்கும், ஹமாஸ் போராளிகளிடமிருந்து நிலத்தடி பதுங்கு குழிகளை சுத்தப்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

காசா பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில், காஸாவின் குடிமக்கள் எகிப்திய பகுதிக்கு சென்று நிரந்தரமாக திரும்புவது தடுக்கப்படும்.

பாலஸ்தீன பொது மக்களை ரஃபாவை நோக்கி வெளியேற்ற அனுமதிக்க, தெற்கு நோக்கி போக்குவரத்து பாதைகளை பயன்படுத்தக்கூடியதாக விட்டுவிடுவது முக்கியம் என்று ஆவணம் கூறுகிறது.

ஹமாஸின் தலைமையின் காரணமாக நீங்கள் இந்த நிலத்தை இழக்கிறீர்கள், என்பதுடன் உங்கள் முஸ்லீம் சகோதரர்களின் உதவியுடன் வேறு இடத்திற்குச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று காசா மக்களை நம்ப வைக்க வேண்டும் என இத்திட்டம் பரிந்துரைக்கிறது.

மேலும், இஸ்ரேலுக்கு விரோதத்தை ஊக்குவிக்காத அல்லது அதன் நற்பெயருக்கு சேதம் விளைவிக்காத வகையில் மேற்கத்திய நாடுகளுக்கு பரிமாற்ற திட்டத்தை ஊக்குவிக்கும் பொது தொடர்பு பிரச்சாரத்தை அரசாங்கம் தொடங்க வேண்டும் என்று திட்டம் கூறுகிறது. காசாவில் இருந்து மக்களை வெளியேற்றுவது சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு அவசியமான மனிதாபிமான நடவடிக்கையாக முன்வைக்கப்பட வேண்டும்.

காசாவில் வசிப்பவர்களை வெளியேற்ற எகிப்துக்கு அழுத்தம் கொடுக்கவும், மற்ற ஐரோப்பிய நாடுகளை ஊக்குவிக்கவும், குறிப்பாக கிரீஸ், ஸ்பெயின் மற்றும் கனடா, வெளியேற்றப்படும் அகதிகளை உள்வாங்கிக் குடியமர்த்த உதவவும் அமெரிக்கா வலியுறுத்த வேண்டும் என்றும் ஆவணம் கூறுகிறது.

**பல அரேபிய மரணங்கள் ?**

இறுதியாக, இஸ்ரேலிய இராணுவத்தால் காசாவை எதிர்பார்க்கப்படும் ஆக்கிரமிப்பின் போது "பல அரேபிய மரணங்கள்" இருக்கும் என்று ஆவணம் கூறுகிறது. மேலும் இது மக்களை வெளியேற்றுவதன் மூலம் இஸ்ரேலின் சர்வதேச நல் உருவத்தை சேதப்படுத்துவதை தவிர்க்கலாம்.

இந்த எல்லா காரணங்களுக்காகவும், உளவுத்துறை அமைச்சகத்தின் பரிந்துரை காசாவில் உள்ள அனைத்து பலஸ்தீனியர்களையும் நிரந்தரமாக எகிப்தின் சினாய்க்கு கட்டாய இடமாற்றுவதை மேற்குலகம் ஊக்குவிக்க வேண்டும் என இந்த ஆவணம் பரிந்துரைக்கிறது. •

# அதிக ஊட்டச்சத்துக் குறைபாடுகள் கொண்ட முதல் 10 நாடுகளின் பட்டியலில் இலங்கையும்!

கொழும்பு, நவ. 05

அதிக ஊட்டச்சத்து குறைபாடுகள் கொண்ட முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டது.

யுனிசெப்பின் மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் குடும்ப வருமானம் மற்றும் செலவினக் கணக்கெடுப்பு அறிக்கையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில், 2.3மில்லின் குழந்தைகள் உட்பட 5.7மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மனிதாபிமான உதவி தேவைப்படும் பட்டியலில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் வறுமைகோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் நிலையானது மிகவும் பயமுறுத்துவதாகவும் அதில் கோடிடப்பட்டு காட்டுகின்றது.

சராசரியாக இலங்கையில் ஒரு குடும்பத்தின் காலை உணவு தேவை, தோராயமாக 36000 ரூபாவை ஒரு மாதத்திற்கு செலவிடவேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறித்த 36000 ரூபாய் காலை உணவுக்காக மாத்திரமே தவிர பிற தேவைகளை பூர்த்தி செய்ய அல்ல எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

பகல் உணவு பொதியின் விலை (மாட்டிறைச்சி அல்லது மீன் இல்லாமல்) ஒரு நாளைக்கு 350 ரூபாய் தேவைப்படுகின்றது, இதில் 350 ஒ4 ஒ 30 என கணக்கிட்டால் 42,000ரூபாய் ஒரு மாதத்திற்கு செலவாகின்றது. நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு நேர உணவிற்கு 42,000 ரூபாய் செலவாகின்றது.

அதாவது நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு காலை, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான செலவு 120,000 ரூபாய் எனவும் தெரியவந்துள்ளது.

இரண்டு குழந்தைகளைக் கொண்ட குடும்பத்திற்கு அடிப்படைக் கல்வித் தேவைகளான சீருடைகள், பள்ளிப் பைகள், பேனாக்கள், பென்சில்கள், உடற்பயிற்சி புத்தகங்கள், வசதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், காலணிகள் மற்றும் காலுறைகளை வழங்க 160,000/- (ஆண்டுதோறும்) தேவைப்படுகின்றது.

தோட்டத் துறையில், தேயிலை மற்றும் இறப்பர் தொழிலாளர்கள், நாட்டுக்கு பெறுமதியான அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் பெரும் பங்காற்றினாலும், அவர்களின் சராசரி மாத வருமானம் 46,865ரூபாவாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் (மலையகத் தமிழர்கள்) மத்தியில் நிலைமை மோசமாக உள்ள நிலையில், நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் குடிமக்களும் சிறப்பாகச் செயல்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

எனவே, நமது மக்கள் தொகையில் பெரும் பகுதியினரின் வருமானம், குழந்தைகளின் கல்வித் தேவைக்கு ஒருபுறம் இருக்க, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மூன்று வேளை அடிப்படை உணவைக் கூட வழங்க போதுமானதாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய புள்ளிவிவரங்களில் வீட்டு வாடகை, மருத்துவத் தேவைகள், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் மற்றும் பொழுதுபோக்குச் செலவுகள் ஆகியவை இல்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளில், அதிக பணவீக்கத்தின் மத்தியில் தொழிலாளர்களின் உண்மையான வருமானம் வீழ்ச்சி கண்டது.

விளைவு - அரசாங்கமே வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, குடும்பங்கள் 2022 மே மாதம் வரையிலான ஒரு வருடத்திற்குள் தங்கள் பெயரளவு வருமானத்தின் மதிப்பில் 40 சதவீதத்தை இழந்துள்ளது. (அ)

# ஜே.வி.பி. ஆட்சியமைத்தால் மாத்திரமே நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கலாம்

## இராமலிங்கம் சந்திரசேகர் கூறுகிறார்



கொழும்பு, நவ. 05

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் வல்லமை மக்கள் விடுதலை முன்னணிக்கு மாத்திரமே உண்டு என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ரணில் - ராஜபக்ஷ தரப்பினர் தொடர்ந்தும் நாட்டை அதாள பாதாளத்திற்கு கொண்டு செல்லும் செயற்பாடுகளையே முன்னெடுத்துள்ளனர். இதனால் நாடு தொடர்ந்தும் பின்னடைவயே சந்திக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், நாட்டு மக்கள் முறையான தலைவர்களை தெரிவு செய்யாவிட்டால் எதிர்கால சந்ததியினரின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் புதிய மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். தற்போதைய நிலையில் மக்கள் விடுதலை முன்னணியை தவிர வேற கட்சிகளுக்கு அத்தகைய தகுதி இல்லை என்றும் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் தெரிவித்தார். (அ)

# மன்னிப்பு கோரலுடன்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இது குறித்து பொலிஸ்மா அதிபருக்கு கடிதமும் எழுதினார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டம் (International Covenant on Civil and Political Rights Act - ICCPR Act) என்று அழைக்கப்படும் அந்த சட்டம் பாரபட்சத்தை, பகைமையை அல்லது வன்முறையை தூண்டிவிடும் வகையில் அமையக்கூடியதாக போர் அல்லது தேசிய, இன, மத வெறுப்புணர்வுகளை பிரசாரப்படுத்துவதை குற்றச்செயலாகக் கருதுகிறது. அத்தகைய குற்றச் செயல்களை செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் எவரையும் மேல்நீதிமன்றத்தை தவிர கீழ் நிலையில் உள்ள எந்த நீதிமன்றமும் பிணையில் விடுவிக்க முடியாது.

ஆனால், அந்த சட்டம் வியாக்கியானப்படுத்தப்படுகின்ற அல்லது பிரயோகிக்கப் படுத்தப்படுகின்றவிதம் எதிர்க் கருத்துக்களை கொண்டவர்களை அடக்குவதற்கும் சிறுபான்மை இனத்தவர்களைக் கொடுமைப்படுத்துவதற்கும் அரசாங்கங்களினால் பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறதே தவிர உண்மையில் அதன் மூலமாகத் தண்டிக்கப்படக் கூடியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை என்பது உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. •

# தினேஷ் ஷாப்டரின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு

கொழும்பு, நவ. 05

சுமார் 06 மாதங்களாக பொலிஸ் பாதுகாப்பில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலம் நேறறு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் குறித்த சடலம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பொரளை பொது மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த ஷாப்டரின் சடலம் கடந்த மே மாதம் 25 ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் பேரில் ஐந்து நிபுணர்கள் அடங்கிய சட்ட வைத்திய அதிகாரிகள் குழு முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டது.

பின்னர் நீதிமன்ற உத்தரவின் படி நிபுணர் தடயவியல் மருந்து வாரியம் முன்பாக மீண் டும் சடலம் தொடர்பான பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டது.

வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் கழுத்து மற்றும் முகத்தில் அழுத்தமேற்பட்டதன் காரணமாக மரணித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதன்படி, இந்தச் சம்பவத்தின் மூலம் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளதாகத் தீர்ப்பளித்த நீதவான் நீதிமன்றம், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரிடம் உத்தரவிட்டுள்ளார்.

அதன் பின்னர், தினேஷ் ஷப்டரின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலம் நேற்று அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# அரசின ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த தவறும் பிரதானிகளுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, நவ. 05

நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய வகையில் நடைமுறைப் படுத்தத் தவறும் அரச நிறுவன பிரதானிகளுக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பணிகளை, அரசாங்க அதிகாரிகள் துரிதப்படுத்த வேண்டியது அவசியம். நாட்டை பின்நோக்கி கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை.

நுவரெலியாவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கண்கவர் பகுதியாக மாற்றியமைக்கும் வேலைத் திட்டங்களைத் துரிதப் படுத்துவதன் மூலம், இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப் பாக இருக்கும்.

சுற்றுலாத்துறை முதலீடுகளை ஈர்க்க, அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய அவர்களின் பொறுப்புக்களை துரிதமாக நிறைவேற்றவேண்டும்.

அரச நிறுவன பிரதானிகள் தமது நிறுவனங்கள் தொடர்பில் சரியான தெரிவைக் கொண்டி ருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அரச நிறுவனங்களிடத்திலிருந்து மக்களுக்கான சேவை கிடைக்காது” எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் 2022 டிசம்பர் 22 மற்றும் 2023 ஏப்ரல் 10 ஆகிய திகதிகளில் ஜனாதிபதி தலைமை யில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கப்பட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், நுவரெலியா அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலக கட்டடத்தின் கீழ் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஆடை விற்பனை நிலையமொன்றையும் ஜனாதிபதி திறந்துவைத்தார். (அ)

# மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

## நாகரட்ணம் இரவீந்திரன்



இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தோட்டத்து வளவு, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் இரவீந்திரன் கடந்த 02.11.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் – சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் – தெய்வானை தம்பதியரின் மருமகனும் செல்வமணியின் அன்புக்கணவரும் நிர்மல், அபர்ணா, சதீஸ், ஆர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேவதி, பிரபாகரன், துஸ்ஷானி, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷன், பிரிபீஷன், பிரிஷிகா, பிரவினாஸ், அத்ரிகா, அம்ரிதா, அதிதிகா ஆகி யோரின் பாசமிகு பேரனும் பாலசுப்பிரமணியம், கலாவதி, சோல்பரி, சந்திரவதி, கேஸ்வரலோலன், றமேஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (03.11.2023) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

எமது தந்தையாரின் பிரிவுத்துயரில் எம்முடன் பங்கு கொண்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாக அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ. நிர்மல் (மகன் - டான் ரிவி) - 077 798 3062**
**இ. சதீஸ் (மகன்) - 077 844 8368**

## டிசெ.22 ...

கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில் இந்த விடுமுறை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## 20வைத்திய....

இதனால் நாட்டில் பல வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

குறிப்பாக கிராமபுறங்களில் காணப்படும் பல வைத்தியசாலைகளில் ஆளணி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வைத்தியர்களும் நாட்டை விட்டு வெளியேறி வருவதால் இந்த வைத்தியசாலைகள் இயங்குவதில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, மாகாணங்களை மையப்படுத்தி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேற்கொண்டுவந்த பணிப் புறக்கணிப்பு நேற்றைய தினம் அரசாங்கத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாடு காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.“ என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## தமிழர்களுக்கு....

விக்கிரமசிங்க, இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தாலும், அரச திணைக்களங்களாலும் தமது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை மற்றும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடி, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதி செய்வதாக தெரிவித்திருந்த போதும் அது இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## போரை....

மீள கொண்டுவரப்படும் எனவும் சஜித் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு 3 ஆவது முறையாக மின் கட்டணத்தை அதிகரித்து இந்நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மின் பாவனையாளர்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இந்நிலையில் பெறுமதி சேர் வரி 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஓர் பிற்போக்குத்தனமான வரி விதிப்பாகும்.

கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் நபர்களிடமிருந்து முறையாக வரி அறவிடப்பட வேண்டும் ,வரி செலுத்தாதோரிடமிருந்தும் முறையாக வரி அறவிடப்பட வேண்டும் ,ஊழல் முறைக ளில் அரச சார்பு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் தேவையற்ற வரிச் சலுகைகளும் நீக்கப்பட வேண்டும் , இம் முறைகள் மூலம் வற் வரியை அதிகரிக்காமல் அரசின் வருவாயை அதிகரிக்க முடியும்.

யுத்த வெற்றி என்ற பெயரிலும் , தேசப்பற்று என்ற போர்வையிலும் மக்களின் தேசிய வளங்களை ஒரு குடும்பம் எவ்வாறு அபகரித்தது என்பது தெரிய வேண்டும் ,யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் முழுமையான சுதந்திரம் வழங்கப்படவில்லை , நாட்டின் வளங்களை இவர்கள் எவ்வாறு திருடினார்கள் என்பதை பண்டோரா பத்திரங்கள் வெளிப்படுத்தின.

நாட்டை அழித்த ராஜபக்சவுக்கு நான் துணைபோகமாட்டேன் என்பதால் அவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டம் அமுல்படுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டுக்கு திருப்பிப் பெறுவோம்.” - என்றார். (அ)

# அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிரான வழக்கு; காணொளி வழங்க ஊடகவியலாளர்களுக்கு உத்தரவு

மட்டக்களப்பு, நவ. 05

அண்மையில் மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பகுதியில் இடம்பெற்ற மயான விடயம் தொடர்பில் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கெதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறுகின்ற வழக்கின் விசாரணை தொடர்பில் சம்பவம் இடம்பெற்ற தினத்தில் அங்கு எடுக்கப்பட்ட காணொளிகளின் உண்மைப் பதிவுகளை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு வழங்குமாறு மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் மற்றும் அதன் பொருளாளர் பு.சசிகரன் ஆகியோருக்கு நீதிமன்றத்தினால் உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஜெயந்திபுரம் பிரதேசத்தில் சிங்கள மயான விடயம் தொடர்பில் அம்பிட்டிய சுமணரத்ன தேரரால் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்துகளை வெளியிட்டதுடன், தமிழர்கள் அனைவரையும் வெட்ட வேண்டும் என்றவாறான இனமுறுகலை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் பலரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அண்மையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிசாருக்கு விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஊடகவியாளர்களிடமிருந்து இவர் தொடர்பான அன்றைய காணொளிகளை கோரும் உத்தரவு நேற்று ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ் உத்தரவானது தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் மோசடிக் கும்பல்!

முல்லைத்தீவு, நவ. 05

முல்லைத்தீவில் சமுர்த்தி உத்தியோகத்தரின் தேவைக்கு எனத் தெரிவித்து மக்களிடம் பணம் அபகரிக்கும் கும்பல் தொடர்பில் மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு கிழக்கு பகுதியில் நேறறு சனிக்கிழமை இனந்தெரியாத இருவர் சிலரது வீடுகளுக்கு சென்று உங்களுக்கான அஸ்வெசும கொடுப்பன 80,000 ஆயிரம் ரூபா உங்களது கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அதை பெறுவதற்கு 30 ஆயிரம் ரூபாய் தற்பொழுது தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், நீங்கள் ஒப்படைத்த பணம் மீண்டும் உங்களது கணக்கில் வைப்பிலிடப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்களிற்கு வேலைப்பழு அதிகம் காணப்படுவதால் இன்றைய கணக்கினை முடிக்க வேண்டும் எனவும் ஆகையால் மக்களிடம் காசை அறவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி உத்தியோகத்தரின் கட்டளைக்கமையவே தான் இப்பகுதியில் மக்களின் காசுகளை பெற்று வருவதாக தெரிவித்ததை அடுத்து வீட்டு உரிமையாளர் தன்னிடம் தற்பொழுது பணம் இல்லை என தெரிவித்துள்ளார்.

அங்கு வந்தவர்கள் சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கதைத்துவிட்டு சொல்கிறேன் என தொலைபேசியில் உரையாடுவது போல் பாசாங்கு செய்துள்ளனர். மீண்டும் அவரிடம் வந்து அம்மா சரி உங்களிடம் இருக்கின்ற 5000 ரூபாய் பணத்தை தாருங்கள் மிகுதி பணத்தை சமுர்தியில் எடுத்து நாளை தந்தால் மாத்திரமே உங்களது 80 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற முடியும் என தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டில் இருந்த முதியவரும் சரி நாளைக்கு உங்களது பணத்தை பெற்று தருவதாக தெரிவித்து 5000 ரூபாய் பணத்தை ஒப்படைத்துள்ளார். இது போன்று இவர்கள் பலரிடம் பணம் வசூலித்து சென்று உள்ளனர்.

இது தொடர்பாக சமுர்த்தி உத்தியோகத்தரிடம் வினவிய போது, இது தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் தெரியாது எனவும், இது தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## லிட்றோ....

கொள்கலனின் விலை 38 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,431 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேவேளை, 2.3 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 18 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 668 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என லிட்றோ நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

## 2024....

தேர்தல் ஆணைக்குழுவை இன்னமும் அணுகவில்லை.

தேர்தல் சட்டத்தில் மாற்றங்கள் குறித்து ஆணைக்குழு சில வருடங்களுக்கு முன்னர் பொதுமக்களின் கருத்தை கோரியிருந்தது.

ஜனாதிபதி தேர்தல், பொது தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு வைப்புத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். இதை ஏற்கனவே நாங்கள் முன்மொழிந்துள்ளோம். இதற்கான சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு திறைசேரியிடம் கோரியுள்ளோம்.

இலங்கையில் திட்டமிடப்பட்ட தேர்தல்கள் எதுவும் இல்லை. பல வருடங்களாக மாகாண சபைகள் நடத்தப்படவில்லை, ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்கள் எப்போது வேண்டுமானாலும் நடத்தலாம்.

எனவே கடந்த சில வருடங்களாக, வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது, மதிப்பீட்டை வழங்குமாறு திறைசேரியால் எங்களிடம் கேட்கப்பட்டபோது, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் எப்போதும் நிதியைக் கேட்கிறோம். இந்தத் தேர்தல்களுக்காக 30 பில்லியன் ரூபாவை கோரியுள்ளோம்.

பொதுத் தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா செலவாகும் என திறைசேரிக்கு தெரிவித்துள்ளோம். ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தால், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதியை வழங்குவதற்கு அரசியலமைப்பு ரீதியாக கட்டுப்பட்டவர்-என்றார். (அ)

# உணவுகளின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 05

நேற்று நள்ளிரவு முதல் பல வகையான உணவு வகைகளின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனியின் விலை அதிகரிப்பு காரணமாக தேநீரின் விலை 5 ரூபாவினாலும் பால் தேநீரின் விலை 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரிசி, மரக்கறிகள், கோழி இறைச்சி மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலை அதிகரிப்பு காரணமாக மதிய உணவு பொதி ஒன்றின் விலை 20 ரூபாவினாலும், கொத்து மற்றும் பிரைட் ரைசின் விலை 20 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ)

# கால்வாய்க்குள் விழுந்த குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, நவ. 05

புத்தளம் - மதுரங்குளியில் கால்வாய்க்குள் விழுந்த ஒரு வயது பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

நேறறு பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக புத்தளம் பகுதிக்குப் பொறுப்பன திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

குழந்தையின் வீட்டுக்கு அருகிலுள்ள கால்வாய்க்குள் வீழ்ந்தே குழந்தை உயிரிழந்துள்ளது.

நேற்று பிற்பகல் குழந்தையின் தாய் மற்றும் அம்மம்மா ஆகியோர் வீட்டு வளவை துப்புரவு செய்துகொண்டிருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்திலேயே குறித்த குழந்தை வீட்டிற்கு அருகிலுள்ள கால்வாய்க்கு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

தமது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டில் சேகரித்த குப்பைகளை கொட்டுவதற்காக கால்வாய்க்கு அருகே வந்த போதே குழந்தை நீரில் மிதந்துகொண்டிருப்பதை தாய் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, அயலவர்களின் உதவியுடன் அந்த குழந்தையை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.


எனினும், அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர், நீரில் மூழ்கியதில் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக இந்த மரணம் நிகழ்ந்துள்ளது எனத் தீர்ப்பு வழங்கி சடலத்தை பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளதாக புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு



கொழும்பு, நவ. 05
2023 இல் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 69,000 ஐ தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 69,231 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன் அதிகபட்சமாக கொழும்பு மாவட்டத் தில் 14,634 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளதுடன் 39பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாகாண ரீதியில் அதிகபட்சமாக மேல் மாகாணத் தில் 33,139 நோயாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

மேலும், கடந்த ஏழு நாட்களில் மொத்தம் 1,453 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# இந்தியாவின் 'றோ'தான் கோட்டாவை விரட்டியது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவம்பர் 05

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டிவிட்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிக்குகொண்டுவந்ததன் பின்னணியில் இந்தியா செயற்பட்டுள்ளது என்று பரபரப்பானதொரு குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வசந்த பண்டார.**

'அறகலயவின்' பின்னணியில் இந்தியாவின் றோவும், அமெரிக்கா வின் சி.ஐ.ஏயுமே செயற்பட்டன எனவும் அவர் கூறினார்.

சிங்கள இணைய ஊடகமொன் றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"இலங்கையில் நெருக்கடி ஏற் பட்டிருந்தவேளைகளில் இந்தியா உதவி இருந்தாலும், அதன்மூலம் தனக்கு உபாயமார்க்கமாக தேவை யானவற்றை அந்நாடு பெற்றுக் கொண்டுள்ளது என்பதே உண்மை. தமது நாட்டு இராணு வத்தை இலங்கைக்கு அனுப்புவ தற்காக இலங்கை - இந்திய ஒப்பந் தத்தை இந்தியா பயன்படுத் திக் கொண்டது. பண்டைய காலத்தில் 17 தடவைகள் இலங்கையை இந்திய ஆட்சியாளர்கள் ஆக்கிர மித்துள்ள னர். அந்த 17 சந்தர்ப்பங்களிலும் போரிட்டு இழந்ததை இலங்கையர் கள் மீளப்பெற்றுள்ளனர். எனவே இலங்கையை காலனித்துவ நாடாக வைத்திருப்பது இலகுவான காரியம் அல்ல என்பது இந்தி யர்களுக்கு தெரியும்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி வீழ்வதற்கு இந்தியா உதவி வழங்கியது என்பது உறுதி. ஊர் பகுதிகளில் வட்டி வியாபாரிபோல் பொருளாதாரத்தை விழ வைத்தே இந்தியா உதவி செய்தது. கோட்டா பய ராஜபக்ஷவை வெளியேற்றி விட்டு ,ரணிலை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு இந்தியா தலை யிட்டதற்கான சாட்சிகள் உள்ளன.

இந்தியாவும், அமெரிக்காவும் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தான் செயற்படுகின்றன. 'குவாட்' அமைப்பின் தேவைதான் கோட் டாவை விரட்டிவிட்டு, ரணிலை கொண்டுவருவது. அதனைதான் இந்தியா செயற் படுத்தியுள்ளது. தனது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு ரணில் தான் பொருத் தமான நபர் என்பது இந்தியாவுக்கு தெரியும். ரணிலை இந்தியா விரும்ப வில்லை என்ப தெல்லாம் இந்த கேமின் ஓர் அங்க மாகும். இலங்கை யில் இடம்பெற்ற 'அறகலய'கூட இந்திய, அமெரிக்கா வின் கூட்டு நிகழ்ச்சி நிரலாகும்." - என்றார். (அ)

# அட்டை வளர்ப்பு பண்ணைகள் சீனாவின் திட்டமிட்ட செயல்!

## ஜனநாயக போராளிகள் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 05
இந்துசமுத்திர அதிகாரப் போட்டியில் மையப்புள்ளியாகும் பாக்கு நீரிணையும் தமிழர்களின் வாழ்வாதாரமும். 99 வருட ஒப்பந்த அடிப்படையில் அம்பாந்தோட் டையை கையகப்படுத்திய சீனா தமிழர்கள் நலன்சார்ந்து செயல் படும் என நினைப்பது சிறுபிள் ளைத்தனமானது என ஜனநாயகப் போராளிகள் ஊடகப்பேச்சாளர் க. துளசி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரி விக்கையில்-

சீனா போன்ற ஒரு பெரிய தேசம் வடக்கில் மீன்பிடிக்க வரவில்லை தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்து தமிழர்களை இடம்பெய ரச் செய்து பாக்கு நீரிணையை தம்வசப்படுத்தி தமிழர் தேசத்தை தமது பிராந்தியமாக்கி அதனூடாக முழு இலங்கையையும் பாக்கு நீரிணையின் மறுபக்கமான தமிழ கத்தையும் கேரளாவையும் தமது கட்டுப்பாட்டு பிராந்தியமாக்கு வதே அவர்களது பிரதான இலக்கா கும்.

அதன் ஆரம்ப கட்டம்தான் வட கடல் எங்கினும் மக்கள் தமது ஜீவ னோபாயமாக சிறுகடல் தொழில் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களை அவர்களிடம் இருந்து பறித்து அட்டை வளர்ப்பு பண்ணைகளாக மாற்றியிருக்கிறார்கள். இன்று அட்டை வளர்க்கும் கடல்பிர தேசங்கள் தமது இயற்கை சமநிலை தன்மையினை இழந்து வருகின்றன. அந்த பண்ணைகளில் பாவிக்கப்ப டும் உயர் தன்மையுடைய வெளிச் சங்களால் மீன்களின் கருக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சீனாவின் நில ஆக்கிரமிப்புக்கான நகர்வுகளை எமது மக்களின் இருப்பு அவர்க ளின் பொருளாதாரம் எதிர்காலம் கருதி அவர்களது வருகையை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

திருகோணமலையும் பாக்கு நீரி ணையும் யார் கையில் வைத்திருக்கி றார்களோ அவர்களால்தான் ஆசியா வையும் இந்துமா சமுத்திரத்தையும் கையாள முடியும். இதன் நிமித்தமே போர்த்துகீசர், டச்சுகாரர், ஆங்கி லேயர்கள் வந்தார்கள் வென்றார்கள் ஆண்டார்கள் சென்றார்கள். ஆனால் சீனாவின் நகர்வு வெற்றி பெறுமானால் ஒருபோதும் பாக்கு நீரிணையை விட்டு செல்லமாட் டார்கள். இந்துமாகடல் சீனமய மாகும்.

இந்தியா ஒரு மெத்தனப் போக் கோடு இலங்கையை எப்போதும் கையாளலாம் என எண்ணுகின்றது. அதன் வெளிப்பாடுதான் அண் மைய இந்திய வெளியுறவு அமைச் சர் மற்றும் இந்திய நிதி அமைச்சர்க ளின் வருகையின்போதும் தமிழ்த் தலைமைகள் புறக்கணிக்கப்பட்ட மையாகும் - என்றார். (அ)

# அரசுக்கு எதிராக வீதியில் இறங்குவேன்!

## தயாசிறி ஜயசேகர எச்சரிக்கை



கொழும்பு, நவ. 05
தற்போதைய அரசு முறையாக செயற்பட வில்லை எனவும் அதனால் மக்கள் மறுபடியும் வீதிக்கு இறங்குவதை தடுக்க முடியாது என்பது டன் நானும் நிச்சயம் வீதியில் இறங்குவேன் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை மீட்பதற்கு தற்போது பொது வேலைத் திட்டமொன்று அவசியம் எனவும் அதற்கு சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும்.

தற்போதைய அரசு முறையாக செயற்படவில்லை. எதிரணிகள் ஒன்றிணைந்து பொதுத்திட்டமொன்றை உருவாக்காவிட்டால் மக்கள் மறுபடியும் வீதிக்கு இறங்குவதை தடுக்க முடியாது. நானும் நிச்சயம் வீதி யில் இறங்குவேன்.

தற்போதைய அரசால் இனியும் முடியாது. அதனால் தான் பொது வேலைத்திட்டமொன்றை உருவாக்கு வதற்கு ஒன்றுபட வேண்டும். எனக்கு பதவி முக்கியம் அல்ல. இதற்காக என்னால் முடிந்த அனைத்து ஒத்து ழைப்புகளையும் வழங்குவேன் - என்றார். (அ)

# 2024ஆம் ஆண்டில் கல்விக்கு 465 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 05
2024 ஆம் ஆண்டில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்காக 255 பில்லியன் ரூபாவும் உயர்கல்விக்காக 210 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும் என எதிர் பார்ப்பதாக உயர்கல்வி இராஜாங்க அமைச் சர் சுரேன் ராகவன் தெரி வித்தார்.

அடுத்த வருட இறுதிக்குள், அனைத் துப் பல்கலைக்கழகங்களினதும் உப வேந்தர்களுக்கு மேலதிகமாக, பிரதி உபவேந்தர்கள் நியமிக்கப்பட உள்ளதாக வும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் கற்றல் மற்றும் கற்பித்தல் உள்ளிட்ட இரு துறைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"இலங்கையில் முதன்முறையாக நுண்கலை, மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பாடங்கள் தொடர்பிலான பகுப்பாய்வு முதன் முறையாக ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இவ்வருட இறுதிக்குள் உரிய இலக்குகளை அடைய எதிர் பார்க்கிறோம். இத்திட்டத்தின் ஊடாக கலைப் பட்டத்தை மேலும் வலுவானதாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம்.

21 ஆவது நூற்றாண்டின் மூன்றாம் காலாண்டிலிருக்கும் நாம் உயர் கல்விக் கான தேசிய ஆணைக்குழு அல்லது அதிகாரசபையொன்றை உருவாக்க எதிர் பார்க்கிறோம். அதனூடாக பல்வேறு பகுதிகளில் முடங்கிக் கிடக்கும் நிர்வா கச் செயற்பாடுகளை ஒரு இடத்திலிருந்து செயற்படுத்த எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் பிரஜைகளை வலுவூட் டும் வகையில் 2025 ஆம் ஆண்டிலிருந்து அரச பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பைப் பெறும் மாணவர்களுக்கு அரசாங்கம் முதலீடு செய்யும் முழுத் தொகையையும் நேரடியாக புலமைப் பரிசில் அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

அதனால் எந்தவொரு மாணவரும் தனக்கு விருப்பமான பல்கலைக்கழகங் களைத் தெரிவு செய்ய முடியும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தெரி வுக்கமைய இந்நாட்டு அரச பல்க லைக்கழங்களுக்குள் தீர்மானமிக்க மாற்றத்தை ஏற்படுத்த முடியும்." என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் கற்றல் மற்றும் கற்பித் தல் உள்ளிட்ட இரு முறைகளிலும் மாற றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் 2024 ஆம் ஆண்டில் கல்விக்காக 255 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற யோசனை முன்வைக்கப் படிருப்பதாகவும் தெரிவித்தார். அதே போல் உயர் கல்விக்காக மேலும் 210 பில்லியன்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், பல்கலைக்கழக கட்ட மைப்புக்களின் நிர்வாகச் செயற்பாடு களை வலுப்படுத்தும் வகையில் அடுத்த வருட இறுதிக்குள், அனைத்து பல்க லைக்கழகங்களினதும் உப வேந்தர்க ளுக்கு மேலதிகமாக பிரதி உபவேந்தர் கள் நியமிக்கப்பட உள்ளதாகவும், இரா ஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# நயாகராவில் ஒரு காதல்

**எஸ்.ஜெகதீசன்**

நயாகராவிற்குப் போவோமா?

ரொரன்டோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய உங்கள் அன்புக்குரியவரின் முதலாவது கேள்வியே இதுவானால் உள்ளுக்குள் கொஞ்சம் சிலிர்க்குமா இல்லையா? சொல்லுங்கள்.

எனக்குச் சிலிர்த்தது.

"உதென்ன... இப்பதானே கனடாவுக்கு வாறாய்... இனி இஞ்சைதானே இருக்கப் போறாய்.. வந்ததும் வராததுமாக நயாகரா என்கின்றாயே அப்படி என்ன அங்கு கொட்டிக் கிடக்கு" என்றார் எம்முடன் விமான நிலையத்துக்கு வந்திருந்தவரும், அண்மையில்தான் 'சூப்பர் விஸா' மூலம் கனடா வந்தவருமான எனது அக்கா.

"கனடா என்றதும் பலரது நினைவில் எழுவது நயாகரா. உத்தியோகத்துக்காக - உல்லாசத்துக்காக - உறவினருக்காக என எந்தக் காரணத்துடனும் கனடா வரும் எவரையும் தவறவிடாது பரவசத்தில் வீழ்த்துவது நயாகரா என்று கேள்விப் பட்டுள்ளேன். அதனால்தான்." என்றாள் என்னவள் பவ்வியமாக.

"கனடாவின் பிரமாண்டமான ஈர்ப்பு நயாகரா என்பார்கள். அதுதான் நயாகராவின் ஈர்ப்பு சக்தி பெரிதா அல்லது எமது ஈர்ப்பு சக்தி பெரிதா? என்று ஒரு தரம் எட்டிப் பார்க்கத்தானே" என்றேன் நான்!

சொந்த ஊர் சிரிப்பில் சிரித்தாள்!

திருமணத்தம்பதிகளின் தேன்நிலவுக்கு உலக மக்களால் பெரிதும் விரும்பப்படும் நயாகரா. உலக தேன் நிலவு தலை நகரம் என்ற பெயரை 1950 ம் ஆண்டு முதல் தக்க வைத்துள்ளது. அதன் நீரில் இ எதிர்மறை அணுக்கூறுகள் செறிந்து நிறைந்திருப்பதால் இயல்பாகவே காம இச்சையை தூண்டும் ஆற்றல் அப்பகுதிக்கு அதிகம்.

என்னவளை உப்படியே நயாகராவிற்கு அள்ளிச் சென்றால் என்ன? வாழ்க்கையில் ஒரு 'திறில்' வேண்டும். நினைத்ததை நினைத்த உடனே செய்யும் வயது. மாற்று யோசனை இல்லாமல் செயல்படுத்தத் தூண்டியது

ரொரன்டோவிலிருந்து 78 மைல் (126கி.மீ) தூரத்தில் உள்ள நயாகராவை மகிழுந்தில் சென்றடைய சுமார் ஒன்றரை மணி நேரம் தேவை. தினசரி பேருந்து தொடருந்து வானுர்ந்து சேவைகளும் உண்டு.

எமக்கு தொடருந்துதான் ஒத்துவரும். இரண்டு மணித்தியாலங்கள் அதற்குள் ஆடுவோம். பாடுவோம். கொண்டாடுவோம்.

நின்ற இடத்திலிருந்தே தொடருந்தில் ஆசனம் பதிவதற்கும் தங்குவதற்கு ஹோட்டலை ஒழுங்கு படுத்தவும், கையிலிருந்த 'மோபைல்' யாமிருக்கப் பயமேன் என்றது!

மோபைலை எட்டிப் பார்த்தவள் "கதவில்லாத குளியலறை கட்டாயம் என அடிக்கோடிடவில்யா?" என்றாள்.

கிளர்ந்த காற்றும் நெளிந்தது!

புகையிரதத்தின் இரு மணி நேர பயணம். இரண்டாயிரம் முத்தங்கள் பற்றுடன் பரவின.

"நல்ல காலம்.பெட்டிக்குள் வேறு எவரும் இல்லை"என்றாள் நாணத்துடன்.

"இருந்திருந்தால் என்ன? எண்ணிக் கையில் இரண்டொன்று குறைந்திருக்கும். அவ்வளவுதான்." என்றேன்.

"சுத்தமானபொய்"என்றாள்.

"அசுத்தமான உண்மை" என்றேன்.

நயாகரா புகையிரத நிலையத்தில் இறங்கியதும் நீர் வீழ்ச்சியின் பேரொலி மிக அருகில் கேட்டது.

உதென்ன நீரின் இடியோசை போலுள்ளதே" என்றாள்.

"உப்படித்தான் பழங்குடி மக்களும் மோகாக் என்ற தமது பாஷையில் அன்று சொன்னார்கள் என்பது வரலாறு. அவர்களது பாஷையில் நயாகராவின் அர்த்தம் நீரின் இடியோசையாகும்" என்றேன்.

நாம் தங்கப் போகும் ஹோட்டல். மிக உயரத்தில் அழகான அறை.. ஒரு யன்னலுக்கு வெளியே கனடிய நீர் வீழ்ச்சி கொட்டியது. பிறிதொரு யன்னல் அமெரிக்கா அருவியை காட்டியது. நள்ளிரவு வரை வர்ண விளக்குகளின் ஒளி வீச்சால் நிறம் மாறும் நயாகரா கண்களுக்குள் நர்த்தனம் புரிந்தது.

அறைக்குள் எமக்கு வேறு அலுவல்!

வெளியே வாண வேடிக்கை வானத்தில் வேடிக்கை காட்டியது!

இளைப்பாறாத இரவின் பின் மறு நாள் மாலைப் பொழுதை சிநேகிதமாக்கி கனடா பக்கமாக உள்ள பெரியதும் ரம்மியமானதுமான குதிரை லாடன் வீழ்ச்சியின் அருகே பார்வையாளர் பகுதிக்குச் சென்றோம்.

"ஓ! புனலின் பூச்சரம்."என்றாள்.

அருவிக்கு புதிய பெயர் சூட்டிய குதுகலத்தில் துள்ளிக் குதித்தாள்.

எட்டி எட்டிப் பார்த்தாள். பின்னர் "ஒரு மண்ணும் தெரியாது என்பதற்கான புது அர்த்தத்தை எனது ஒரு சோடி கண்களுக்கு மட்டுமல்ல பார்க்கும் பல கோடி கண்களுக்கும் கற்பிற்குமோ இந்தப் புனலின் பூச்சரம்" என்றாள்.

பிரகாசமான நாட்களில் நிதமும் மதியம் முதல் சூரிய அஸ்தமனம் வரை நீர்வீழ்ச்சியின் ஒளித்தெறிப்பால் அருவிக்கே வந்து வர்ணஜாலம் காட்டும் வானத்தில் தெரியும் வானவில்.

இன்று உயிரோடு ஒய்யாரமாக என் எதிரே விந்தை புரிந்து கொண்டிருந்தது. - என்னவளாக!

"இது மலையின் வீழாறு அல்ல. ஒன்ராரியோ ஏரியில் எரிக் ஏரியின் நீரெடுப்பு கலப்பதே நயாகரா ஆகும். கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தையும் அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தையும் எல்லைகளாக்கி சமதளத்தில் ஓடி கால் மட்டத்துக்கு கீழாக ஒவ்வொரு விநாடியும் 28000000 லீட்டர் நீரை வெள்ளை நிறத்தில் 165 அடி ஆழாத்துக்கு பெரும் பள்ளத்தில் ஓயாமல் கொட்டுகின்றது இயற்கை." என்றேன்.

"500 நீர்வீழ்ச்சிகள் உலகினை பிரமிப்புடன் அண்ணாந்து பார்க்க வைத்தாலும் நயாகரா என்ற இந்த புனலின் பூச்சரம் மட்டும் வருடந்தோறும் 30 கோடி மக்களை குனிந்து பார்க்க வைக்கின்றது. அப்படித்தானே?"என்றாள்.

"அருகருகே மூன்று நீர்வீழ்ச்சிகளை கொண்டது நயாகரா. அவற்றுள் முதலாவதும் பெரியதும் இது. அடுத்தது அமெரிக்க வீழ்ச்சி. சிறியது மணமகள் முக்காடு." என்றேன்.

"நிலவில் கால் வைப்பதில் வெற்றியீட்டிய அமெரிக்கா பலமுறை கனடாப் பக்க நயாகராவில் கை வைக்க முனைந்தும் தோற்ற கதை எனக்கும் தெரியும்" என்றாள்.

எந்த வயதினருக்கும் ஏற்ற ஏதாவது எப்பொழுதும் இருக்கும் கேளிக்கை பிரதேசமாக நயாகரா வர்ணிக்கப்படுகின்றது. கடல் தேசம், வண்ணாத்திப் பூச்சிகள் சரணாலயம், பறவைகள் ராஜ்ஜியம் இ நீரின காட்சியகம், தண்ணீர் பூங்கா, மெழுகு நூதனசாலை இகின்னர்ஸ் சாதனை நூதன சாலை, பளிங்குக் குகை இகூரை கீழாக மாறிய வீடு, அசகாய வீடு, வேடிக்கை வீடு போன்ற சில பகுதிகளுக்கு சென்று வந்தவர்களுக்கு அன்றைய தினமாவது வயதை மறந்த மகிழ்ச்சி கரைபுரளும்!

இவை எல்லாம் வாய் பேச மாட்டாதவை என்று யார் சொன்னார்கள்? சிறுவரோடு மகிழ்ச்சியிலும் முதியவரோடு கவலையிலும் அவை சொல்லும் கதை ஏராளம்!

தேடுக! தேறுக!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையில் ஒவ்வொன்றாக ஓரளவிற்கு எல்லாவற்றையும் பார்த்தோம்! சிலதுக்கு அரை மணி நேரம் காணும். சிலதுக்கு இரு மணி நேரம் தேவைப்பட்டது.

பொழுது போனதே தெரியவில்லை.

ரொரன்டோவில் விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது எங்கோ ஓரிடத்தில் இதர மொழிகளுடன் நல்வரவு என்று தமிழில் எழுதியிருந்ததைப் பார்த்தது நினைவில் வந்தது.

"நயாகராவிலும் உப்படி உள்ளதாமே?" என்று விமான நிலைய வரவேற்புக் கூடத்தில் எனது பெரியப்பாவை கேட்டதும் அதற்கு அவர் பெரிய 'லெக்சரே' செய்ததும் நினைவில் தொடர்ந்தது.

"ஓம் பிள்ளை. எழுதியிருக்கு. ஆனால் அதைப் பார்க்க வேண்டுமானால் அமெரிக்காப் பக்கம் போகவேண்டும். அங்கு எல்லையையொட்டி ஆட்டுத்தீவு என்று ஒரு குட்டித்தீவு. அங்குதான் உந்த நல்வரவு உண்டு. நீர் வீழ்ச்சியை அதன் பின் புறத்திலிருந்து அதுவும் ஆக அடி மட்டத்திலிருந்து பார்ப்பது கொள்ளை அழகு! முப்பது வருடங்களுக்கு முன் கனடாவுக்கு வந்து குடியுரிமை பெற்ற புதிதிலை முதன் முதலாக போனனான். பேந்தும் இரண்டு மூண்டு தடவை போயிருப்பன். அச்சா இடம். இளந்தாரிகளுக்கு ஏற்ற இடம். வயது போனதுகள் களைச்சுப்போம். படிக் கட்டுகளிலை இஞ்சையும் அங்கையும் மாறி மாறி இறங்கி ஏறணும். சாரல் முற்றாய் தோச்சுப் போடும். நாரி ஈவு இரக்கமில்லாமல் பிஞ்சுபோம்"

"சிறிய அருவியான மணமகள் முக்காட்டின் வெளிப்பார்வைக்கு எட்டாத பின்புறத்தை காற்றின் குகை மூலம் பரவசத்துடன் பார்க்கலாம். மலையை குடைந்து சிறு பொந்து போல் காணப்படும் பகுதிக்குள் சென்றாலோ மற்ற இரு அருவிகளும் புயல் வேடமிட்டு எம்மை அள்ளிச் செல்வது போல் பதற வைக்கும். நடுக்கமுறாத மீன்கள் சாரமாரியாய் எம்மீது வீழ்ந்து எம்மை உதற வைக்கும். அங்குள்ள ஒரு சிறு ஏணியில் ஏறினால் முழு அருவியும் எம் மீது விழும் திகிலை ஏற்படுத்தும்.உலகில் வேறெந்த அருவியின் அடிவாரத்தையும் இவ்வளவவு நெருக்கமாக பார்க்க முடியாது என்பது இதன் சிறப்பு. ஈரமாக அங்குள்ள சுவர்களில் சாதனை புரிந்தவர்களின் பெயர்களும் உண்டு.செத்தவர்களின் பெயர்களும் உண்டு."

"சின்னஞ் சிறுசுகள் ஒண்டோடை ஒண்டு இறுகக் கட்டிப்பிடித்துக் கொள்ளும். இதுதான் சாட்டு என்ற நினைப்போ அல்லது போனால் ஒண் டாய் போவோம் என்ற பயமோ யாரறிவர்?"

'காணும்.காணும்.பெரியப்பா. விட்டால் நீங்கள் சொல்லிக் கொண்டே போவீர்கள்" என்று இடை நிறுத்தியதும் நினைவில் வந்தது.

புகாரின் கன்னி என்ற படகில் குதிரை லாடன் அருவியின் வெளிப்புற அடிவாரத்திற்கு மிக மிக அருகில் சென்றோம்.

அட்சதை சொரிந்தது சாரல்!

அது மேலிருந்து கீழிறங்கும் வேகம் சாகசம் நல்ல அனுபவம். சாரலில் தோய்ந்தாலும் குழம்பாது விழி அதிர கோப ஆறு கொப்பளித்து வீழும் பிரவாகம் பிரளயம்

நமக்கும் மேலே ஒரு சக்தி இருப்பதை நாஸ்திகரும் நம்பக் கூடிய ஒரு தருணம் இதுவென்ற உணர்வு வெளியே வந்த பின்பும் நீங்கவில்லை. காலநிலை எப்படியிருப்பினும் நயாகராவின் இந்தப் படகு பயணம் மட்டும் உறைவதில்லை என்று பேசிக் கொண்டனர் படகிலிருந்து எம்முடன் வெளியே வந்தவர்கள்.

"குதிரை லாடன் வீழ்ச்சியின் பின் பக்கத்தை பார்க்க முடியாதோ?"

"அருவியின் பின்புற பயணம் என்ற பெயரில் ஒன்றை வைத்திருக்கிறார்கள். சுமார் 150 அடி நீள சுரங்கத்தில் இரைச்சலையும் சாரலையும் தவிர திகில் என்றிட எதுவுமில்லை. முன் பக்கம் போலவே பின் பக்கமும் இருப்பினும் சுரங்கத்துள் பின் பக்கம் வீழ்ச்சி இடைக்கிடை மட்டுமே தெரியும்" என்றேன்.

"ஓ! அப்ப முன்னுக்குப் பின் முரண் என்று சொல்லுங்கோ" என்றாள்.

"காலநிலை சீராயிருக்கின்றது. உலங்குவானுர்தியில் நயாகராவின் ஆதி அந்தம் பார்க்கலாமா? அல்லது அறைக்குப் போய் வேறு அலுவல் பார்போமா?" என்றேன் நான்.

உங்களின் வேறு அலுவல் என்ன என்று எனக்குத் தெரியும். இப்ப வாங்கோ நயாகராவின் வியாபகத்தை புதிய பரிணாமத்தில் பார்த்து அதில் மெய்மறந்து நிற்போம்." என்றாள்

"நான் உங்கள் விமானி ரவி.பொதுவாக 15 நிமிடங்கள் பயணம். நீங்கள் தேன் நிலவுக்காக வந்ததால் மேலதிகமாக 5 நிமிடங்கள் போனஸ். சீட் பெல்ட்களை போடுங்கள். ஆரம்பிப்போம்" என்றார்.

ஆர்ப்பரித்த நயாகரா அருவி அமைதியான நயாகரா ஆறாக மாறும் இடத்தில் இருந்து 18 மைல் (27கி.மீ) தூரம் ஒரு பக்கம் கனடாவும் மறு பக்கம் அமெரிக்காவும் எம்முடன் பறந்தன. கீழே நயாகரா ஆறு 32 மைல் வேகத்தில் ஓடினாலும் அசைவற்று நிற்பதாக நினைக்க வைத்தது.

நயாகரா ஆற்றில் குதித்தாடி ஓடும் மீன்களை குறி வைத்துக் கவ்வும் நீர்பறவைகள் இதயத்தில் இறக்கைவிரிக்க -ஆட்டுத்தீவு, மூன்று சகோதரிகள் தீவு, சந்திர தீவு, பெரும்தீவு,கோபுரத் தீவு, கடற்படைத்தீவு, பறவைத்தீவு, மான்தீவு உள்ளிட்ட பல தீவுகளையும் திடல்களையும் 'மேற்பார்வையிட்டோம்'.

"எப்படி இருந்தது அனுபவம்?" என்றார் விமானி.

"கனடாவில் தமிழர் ஆகாசத்தில் பறக்கின்றார்கள் என்பது எவ்வளவு உண்மை" என்றாள் என்னவள்.

"நீங்கள் காட்டியது வானத்தை. நாங்கள் கண்டது சொர்க்கத்தை" என்றேன்.

"வாழ்க நயாகரா"என்றார் விமானி.

சிக்கனமில்லாத சிரிப்பு எங்கும் மிகுந்தது!



# காவாலா சாதனை

நெல்சன் இயக்கத்தில், அநிருத் இசையமைப்பில், ரஜினிகாந்த், ரம்யா கிருஷ்ணன், வசந்த் ரவி மற்றும் பலர் நடிப்பில் வெளிவந்த படம் 'ஜெயிலர்'. இப்படத்தில் தமன்னா நடனமாடிய 'காவாலா' பாடல் வெளியானதுமே பெரு வெற்றி பெற்றது.

அதன் லிரிக் காணொலி யு ரியூப் தளத்தில் 21.5 கோடி பார்வைகளைக் கடந்துள்ளது. தற்போது அப்பாடலின் காணொலி 10 கோடி பார்வைகளை கடந்துள்ளது. பாடல் வெளியான ஒரு மாதத்துக்குள் இந்த சாதனை நிகழ்ந்துள்ளது.

"ஜெயிலர்" படத்தை மக்களிடம் கொண்டு போய் சேர்த்ததில் இந்த "காவாலா" பாடலுக்கு முக்கிய இடமுண்டு. இப்பாடல் முழுக்க முழுக்க தமன்னாவின் கவர்ச்சிப் பாடலாக அமைந்தது. ரஜினி பாடலின் இடையில் ஒரிரு முறை மட்டுமே வந்து போவார்.




## மீண்டும் அயலான் கூட்டணி

'அயலான்' படத்தைத் தொடர்ந்து தான் இயக்கும் புதிய படத்தில் மீண்டும் சிவகார்த்திகேயன் நடிக்க இருப்பதை இயக்குநர் ரவிக்குமார் உறுதி செய்துள்ளார்.

கிரபிக்ஸ் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தால் இப்படத்தின் வெளியீடு தொடர்ந்து தள்ளிப் போனது. அண்மையில் வெளியான இப்படத்தின் டீசர் வரவேற்பை பெற்றது. இப்படம் வரும் பொங்கல் பண்டிகைக்கு திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்த நிலையில், இயக்குநர் ரவிக்குமார் அளித்த பேட்டி ஒன்றில் தனது அடுத்த படத்திலும் சிவகார்த்திகேயன் நடிக்க இருப்பதை அவர் உறுதி செய்துள்ளார்.

## தாய்லாந்தில் விஜய்

வெங்கட் பிரபு இயக்கத்தில் தான் நடிக்கும் 68ஆவது படத்தின் படப்பிடிப்புக்காக தாய்லாந்து புறப்பட்டுச் சென்றார் நடிகர் விஜய்.

விஜய் நடிக்கும் 68ஆவது படத்தை வெங்கட் பிரபு இயக்க உள்ளார். இதில் விஜய் 2 வேடங்களில் நடிக்கிறார் என்று கூறப்படுகிறது. இப்படத்தில் பிரசாந்த், மோகன், பிரபுதேவா, சினேகா, லைலா, ஜெயராம் உள்ளிட்டோர் முக்கிய கதா பாத்திரங்களில் நடிக்கின்றனர். முன்னதாக இப்படத்தின் கிராபிக்ஸ் பணிகளுக்காக விஜய், வெங்கட் பிரபு உள்ளிட்ட படக்குழு அமெரிக்கா சென்றிருந்தது.

இந்த நிலையில், 'விஜய் 68' படத்தின் படப்பிடிப்பு பணிகளுக்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் தாய்லாந்து புறப்பட்டுச் சென்றார் விஜய்.



தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் சில நாட்கள் நடக்க இருக்கும் படப்பிடிப்பில், படத்தின் சண்டைக் காட்சிகள் படமாக்கப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

## சண்டைக்காட்சிக்கு 750 வாகனங்கள்




பிரபாஸ் நாயகனாக நடித்துள்ள படம், 'சலார்: பகுதி 1- சீஸ்பயர்'.'கே. ஜி. எவ். 2' படத்துக்கு பிறகு பிரசாந்த் நீல் இயக்கும் படம் இது. இதில் ஸ்ருதிஹாசன் நாயகியாக நடிக்கிறார்.

பிருத்விராஜ், ஜெகபதி பாபு வில்லன்களாக நடிக்கின்றனர். இந்தப் படம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மலையாள மொழிகளில் டிசெ. 22இல் வெளியாக இருக்கிறது.

சண்டைக்காட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் இந்தப்படத்தின் சண்டை காட்சிகளில்750 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**திரைப்படம் - தி ரோட்**
**இயக்கம் - அருண் வசீகரன்**
**இசை - சாம் சிஎஸ்**
**நடிப்பு - த்ரிஷா, ஷபீர், மியா ஜார்ஜ்**




ஒவ்வொரு படத்துக்கும் கதைக் களம் என்பது மிகவும் முக்கியமானது. இதுவரையில் ஒரு சாலையை கதைக் களமாக வைத்து எந்தப் படமும் வந்ததில்லை என்றுதான் சொல்ல வேண்டும். புதுமையான கதையுடன், ஒரு பரபரப்பான த்ரில்லர் படத்தைக் கொடுக்க முயற்சித்து அதில் குறிப்பிடத்தக்க வெற்றியையும் பெற்றிருக்கிறார் இயக்குநர் அருண் வசீகரன்.

கணவர் சந்தோஷ் பிரதாப், ஒரு மகன் என மகிழ்ச்சியான வாழ்க்கையில் இருக்கிறார் த்ரிஷா. இரண்டாவதாக தாய்மை அடைகிறார். மகனின் பிறந்த நாளைக் கொண்டாட அவரால் செல்ல முடியாத நிலையில் கணவரும் மகனும் காரில் கன்னியாகுமரி செல்கிறார்கள். செல்லும் வழியில் மதுரை அருகே விபத்தில் சிக்கி இருவரும் இறந்து போகிறார்கள். அந்த விபத்தின் பின்னணியில் ஏதோ ஒரு சதி இருக்கிறது என நினைக்கிறார் த்ரிஷா. அதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் தோழி மியா ஜார்ஜ/டன் இறங்குகிறார். அது என்ன சதி என்பதைக் கண்டுபிடித்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

த்ரிஷா தனி கதாநாயகியாக நடித்த படங்கள் அவருக்கு இது வரையில் குறிப்பிடத் தக்க படங்களாக அமையவில்லை என்பதே உண்மை. ஆனால், இந்தப் படம் அந்தக் குறையைப் போக்கியிருக்கிறது. கணவனையும் மகனையும் பறி கொடுத்தாலும் சோர்ந்து விடாமல் அந்த விபத்தின் பின்னணியில் உள்ள உண் மைகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கி றார். பொலிஸ் செய்ய வேண்டிய வேலைகளை த்ரிஷாவே செய்து முடிக்கிறார். த்ரிஷாவின் அடுத்த தனி கதா நாயகி படங்களுக்கான பாதையை இந்தப் படம் ஆரம்பித்து வைத்திருக்கிறது.




த்ரிஷா கதை ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்க, அதற்கு இணையாக ஷபீர் பற்றிய கதை ஒன்றும் போய்க் கொண்டிருக்கிறது. அதை திரைக்கதை யுத்தி என இயக்குநர் நினைத்திருந்தால் அதுதான் இந்தப் படத்தை பின்னோக்கி இழுத்துவிட்ட விஷயமாகவும் இருக்கிறது. அந்தக் கதாபாத்திரத்தை அப்படியே பின்னணிக் கதையில் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதிலும் கல்லூரியில் வேலை பார்க்கும் ஷபீரை மாணவி ஒருவர் காதலிப்பதை சுருக்கமாகக் காட்டி முடித்திருக்கலாம்.

த்ரிஷாவின் தோழியாக மியா ஜார்ஜ். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தமிழில் நடிக்க வந்துள்ளார். த்ரிஷாவின் கணவராக ஒரிரு காட்சிகளுடன் போய்விடுகிறார் சந்தோஷ் பிரதாப். ஷபீர் அப்பாவாக வேலராம மூர்த்தி கண்கலங்க வைக்கிறார். காரில் விபத்து ஏற்படுத்தி கொள்ளை அடிக்கும் செம்மலர் அன்னம் கதாபாத்திரத்தை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கி இருக்கலாம்.

திரில்லர் படங்கள் என்றாலே சாம் சிஎஸ் பின்னணி இசை தனியாகத் தெரிந்துவிடும். இந்தப் படத்திலும் தனது இசையால் படத் தைக் கொஞ்சம் தூக்கி நிறுத்துகிறார். இரவு நேரக் காட்சிகள், சாலை காட்சி கள் ஆகியவற்றில் பரபரப்பாகப் பயணித்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் கே. ஜி. வெங்கடேஷ்.

பரபரப்பாக ஆரம்பமாகும் படம் இடையிடையே தொய்வை ஏற்படுத்தி பின் வேகமாக பயணிக்கிறது. இடைவேளைக்குப் பின் இவர்களை வில்லனாக்கினால் திருப்பமாக இருக்கும் என நினைத்து கோட்டை விட்டிருக்கிறார்கள். இவர்கள்தான் வில்லன் என்பது மர்மமாக இருந்தாலும் அதில் எந்த பரபரப்பும் இல்லாமல் போய்விடுகிறது. இடைவேளைக்குப் பின் வரும் திரைக்கதையை மாற்றி யோசித்திருந்தால் பெரிய வெற்றிப் படமாகி இருக்கும்.



## இரு பாகங்களாகும் 'இந்தியன் 2'?

ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துள்ள 'இந்தியன் 2' திரைப்படம் இரண்டு பாகங்களாக வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது.

ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கும் படம், 'இந்தியன் 2'. இதில் ரகுல் ப்ரீத் சிங், காஜல் அகர்வால், பாபி சிம்ஹா, சித்தார்த், பிரியா பவானி சங்கர் உட்பட பலர் நடித்துள்ளனர். முக்கிய வில்லனாக எஸ்.ஜே.சூர்யா நடித்துள்ளார். இறுதிகட்டப் பணிகளில் இருக்கும் இப்படம் அடுத்த ஆண்டு ஏப்ரலில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.

# பந்தயத்தில் முந்தும் ஆப்கான்

உலகக் கிண்ணத் தொடரில் யாருமே எதிர்பார்க்காமல் அதிக எதிர்பார்ப்புமிக்க போட்டியாக மாறியிருந்த ஆப்கானிஸ்தான் எதிர் நெதர்லாந்து போட்டி நடந்து முடிந்திருக்கிறது.

நெதர்லாந்தும் ஆப்கானிஸதானும் இந்த உலகக் கிண்ணத்தில் தங்களை விட எல்லாவிதத்திலும் வலுமிக்க போட்டியாளர்களை வீழ்த்தி அசத்தியிருக்கின்றனர். இரு அணிகளுக்குமே இன்னும் அரையிறுதி வாய்ப்பும் இருந்த தால் இந்தப் போட்டி சுவாரஸ் யமாக இருக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்க்கப்பட்ட சுவாரஸ் யம் இந்தப் போட்டியில் இல்லை. ஆப்கானிஸ்தான் அதிக ஆதிக்கம் செலுத்தி இந்தப் போட்டியை வென்று தங்களுக்கான அரையிறுதி வாய்ப்பையும் பிரகாசமாக்கியிருக்கின்றனர்.




லக்னோவில் நடந்த இந்தப் போட்டியில் நெதர்லாந்து அணியின் தலைவர் ஸ்கொட் எட்வர்ட்ஸ்தான் நாணயச் சுழற்சியை வென்றிருந்தார். முதலில் நெதர்லாந்து துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார். கடந்த சில போட்டிகளாக துரத்தி வெற்றி பெறுவதிலும் கலக்கி வரும் ஆப்கானிஸ்தானுக்கு இந்த முடிவு சாதகமாகவே இருந்தது. நெதர்லாந்து அணி தொடக்கத்தில் நன்றாகவே ஆடியது.

முஜீப், நபி, ரஷீத் கான், நூர் என நான்கு சுழல் வீரர்களை ஆப்கானிஸ்தான் பயன்படுத்தியது. சுழல் வீரர்கள் மட்டுமே *38.3* ஓவர்களை வீசியிருந்தனர். *6* விக்கெட்களையும் வீழ்த்தியிருந்தனர். மீதமிருந்த *4* விக்கெட்களையும் ரன் அவுட்டாக தாங்களாகவே வந்து இரையாகக் கொடுத்தது நெதர்லாந்து. இறுதியில் அந்த அணி *179* ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

*180* ஓட்டங்களை துரத்திய ஆப்கானிஸ்தான் அணி *31.3* ஓவர்களிலேயே இலக்கை எட்டியது. அவர்களின் வழக்கப்படியே இந்த இந்த ஓவர்களில் இவ்வளவு ஓட்டங்களை அடித்திருக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து இலக்கை எளிதாக துரத்தி வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்தில் ஆட வந்த ரஹ்மத்தும் நான்காம் இடத்தில் இறங்கிய அணித் தலைவர் ஹஸ்மத்துல்லா ஷாகிதியும் அரைச்சதம் அடித்து அணியின் வெற்றிக்கு உதவியிருந்தனர். இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி *7* விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. மைதானத்தைச் சுற்றி வந்து ரசிகர்களின் ஆர்ப்பரிப்புக்கெல்லாம் பதில் மரியாதை கொடுத்து விடைபெற்றனர் ஆப்கான் வீரர்கள்.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் 5ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறது ஆப்கானிஸ்தான் அணி. இன்னும் அவுஸ்திரேலியாவையும் தென்னாபிரிக்காவையும் ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவிருக்கிறது. இந்த இரண்டுமே அவர்களுக்கு மாபெரும் சவாலாக இருக்கும். என்ன செய்யப்போகிறார்கள்? பொறுத்திருந்து பார்ப்போம்.

# கண்ணீரும் நன்கொடையும்

பலஸ்தீனத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடை அளிப்பதாக ரெனிஸ் வீராங்கனை ஒன்ஸ் ஜபேர் அறிவித்திருக்கி றார்.

இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கு இடையேயான போர் கிட்டத்தட்ட ஒரு மாதத்தை எட்டியிருக்கிறது. இந்தப் போரில் ஏராளமானோர் பலியாகினர். குறிப்பாக இஸ்ரேல் தாக்குதலால் பலஸ்தீன மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பலரும் பலஸ்தீன மக்களுக்கு உதவி வரும் நிலையில் துனிசியா நாட்டைச் சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை ஒன்ஸ் ஜபேர், செக் குடியரசு வீராங் கனை வாண்ட் ரோசோவாக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்று கிடைத்தப் பரிசுத் தொகையைப் பலஸ்தீனத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடை அளிப்பதாக கண்ணீர் மல்க தெரிவித்திருக்கிறார்.

போட்டிக்கு பிறகு பேசிய ஒன்ஸ் ஜபேர், “ இந்தப் போட்டியில் வென்றது மகிழ்ச்சி. ஆனால், சமீப காலமாக என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும் போரில் குழந்தைகள் இறப்பதைப் பார்ப்பதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது. அந்த சம்பவங்கள் மனதைப் பதற வைக்கிறது. என்னுடைய பரிசுத் தொகையில் ஒரு பகுதியைப் பலஸ்தீனத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன் கொடையாகக் கொடுக்கிறேன். இது அரசியல் சார்ந்த கருத்து கிடையாது மனிதாபிமா னம் மட்டுமே” என்று தெரிவித்திருக்கிறார்.





# “முதல் அணி நாங்கள்தான்”

இந்தியா - இலங்கை அணிகள் மோதிய போட்டியில் இந்திய அணி 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று உலகக் கிண்ணத் தொடரில் முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்த நிலையில் ரோஹித் சர்மா “சேப்பாக்கத்தில் உலகக் கிண்ணப் பயணத்தை தொடங்கிய போது அரையிறுதிக்கு தகுதிப் பெற வேண்டும் என்பதைத்தான் முதல் இலக்காக வைத்திருந்தோம். இப்போது அது நடந்துவிட்டதில் மகிழ்ச்சி. ஒவ்வொரு வீரரும் தனிப்பட்ட முறையில் பொறுப்பை உணர்ந்து ஆட வேண்டும் என விரும்பினேன். முடிந்திருக்கும் 7 போட்டிகளில் பல வீரர்கள் முன் நின்று சிறப்பாக ஆடி போட்டிகளை வென்று கொடுத்திருக்கின்றனர்.“ என்றார்.

இந்த ஆட்டத்தில் கே.எல் ராகுலின் ஆலோசனைப்படி டி. ஆர். எஸ். முடிவை ரோஹித் சர்மா எடுத்திருந்தார். அது அணிக்கு சாதகமாக அமைந்திருந்தது. இந்நிலையில் இதுகுறித்து பேசிய அவர், டி. ஆர். எஸ். முடிவை எப்போதும் நான் எடுக்கமாட்டேன். பந்துவீச்சாளர் மற்றும் விக்கெட் காப்பாளரிடம் விட்டுவிடுவேன். என்று கூறியி ருக்கிறார். இந்த போட்டியில் ஸ்ரேயஸ் ஐயர் மிகவும் தெளிவாக விளையாடினார்.

அவரை நான் நீண்ட நாட்களாகவே பார்த்து வருகிறேன் அவர் இது போன்ற பெரிய இன்னிங்ஸை விளையாடக் கூடிய வர்தான். அந்த வகையில் இந்தப் போட்டியில் அவருடைய திறனை நன்றாகவே வெளிக்காட்டி யிருக்கிறார். அதேபோல் பந்துவீச்சில் சிராஜ் ஒரு திறமைமிக்க பந்துவீச்சாளர். அவர் தகுதியுடன் இருந்தால் ஆட்டத்தில் அவர் மிகப்பெரிய வித்தியாசத்தை உருவாக்க கூடியவர். எங்கள் அணி இனிவரும் போட்டிகளிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி முதல் அணியாக இறுதிப்போட்டிக்கும் செல்வோம்.“ என்று மகிழ்ச்சியாக தெரிவித்திருக்கிறார்.